பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நூலகத்துறைப் பிரிவு

பக்கங்கள் எட்டு

ரூபா 5-00

# வலம்புரி
VALAMPURI

உள்ளே

க.பொ.த.(சா.த) மாணவருக்கான கணிதம்

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 புரட்டாதி 30 திங்கட்கிழமை (16-10-2000) தொ. பேசி: 3378 ஒலி: 301

## ★ பதினோராவது பாராளுமன்றத்தின்
# புதிய அமைச்சரவை அமைப்பதில்
# பொ.ஐ.ஐ. முன்னணிக்குள் இழுபறி

### சுப நேரத்தில் பதவி ஏற்கப்படுமென பிரதமர் அறிவிப்பு

(நமது நிருபர்)

**பதினொராவது பாராளுமன்றத்தின் புதிய அமைச்சவை திட்டமிட்டபடி இன்று பதவி ஏற்கப்படமாட்டாதென பிரதம மந்திரி ரட்னசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.**

**புதிய அமைச்சரவையில் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசில் இணைந்துள்ள கட்சிகளுக்கு அமைச்சுப் பொறுப்புக்களைப் பகிர்ந்து வழங்குவதிலும் உரியவர்களை தெரிவு செய்வதிலும் ஏற்பட்டுள்ள சிக்கல்களே மந்திரிசபையை அமைப்பதில் காலதாமதம் ஏற்படுவதாக பொது ஜன ஐக்கிய முன்னணி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.**

பதினோராவது பாராளுமன்றத்தின் புதிய பிரதமராக ரட்ன சிறி விக்கிரமநாயக்கா பதவி ஏற்று மூன்று தினங்களாகியும் மந்திரிசபை அமைக்கப்படாமையால் திட்டமிட்டபடி இன்று பதவியேற்பு வைபவம் நடைபெறமாட்டாது.

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசுடன் இணைந்துள்ள கட்சிகளுக்கும் அமைச்சுப் பொறுப்புக்களை வழங்குவதில் அரசுக்குள் நிலவும்

(8ஆம் பக்கம் பார்க்க)

# சபாநாயகர் பதவிக்கு அனுராவின் பெயர்?

### ஐ. தே. கட்சி முயற்சி

(கொழும்பு)

பதினோராவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் அனுரா பண்டாரநாயக்கவின் பெயர் முன்வைக்கப்படுமென ஐக்கிய தேசியக்கட்சி வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை சபாநாயகர் நியமனம் தொடர்பாக எதுவும் தனக்குத் தெரியாதென அனுரா பண்டாரநாயக்காவுடன் தொடர்புடைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(வ)

## ஸ்ரீ மாவின் கண்களால் இருவர் ஒளி பெற்றனர்

உலகின் முதலாவது பெண் பிரதமரும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவின் தாயருமான அமரர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் கண்கள் மூலம் இருவர் பார்வை பெற்றுள்ளனர்

சர்வதேச கண் வங்கிக்கு தனது கண்களை வழங்க ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா ஒப்பந்தம் செய்திருந்தார்.

இதற்கமைய அவரது கண்கள் கடந்த 10 ஆம் திகதி கண்வங்கிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீமால் குணசிங்கா தலைமையிலான வைத்திய குழுவினால் எடுக்கப்பட்டது.

இக் கண்கள் மூலம் கொழும்பு கண் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற இருவர் பார்வை பெற்றதுடன் பெருமையும் பெற்றுள்ளனர்.

[ந-2]

# தேசிய பட்டியல் எம்.பிக்கள்தெரிவில் கட்சிகளுக்குள் இழுபறி நிலை

(கொழும்பு)

தேசியபட்டியல் மூலம் எம்.பிக்களை நியமனம் செய்வதில் கட்சிகளுக்குள் இழுபறி நிலை காணப்படுகிறது.

பொதுஜன ஐக்கிய முன்னணி சார்பில் கொழும்பில் போட்டியிட்டு தோல்வி அடைந்த இலங்கை தொழிலாளர் காங்கிரசை சேர்ந்த ஆர்.யோகராஜனுக்கு தேசியப்பட்டியலில் இடம் வழங்க வேண்டும் என காங்கிரஸ் தலைமைப்பீடம் வற்புறுத்தி வருகிறது. இதேபோல் ஈ.பி.ஆர்.எல்,எவ்.வரதர்அணியில் வரதராஜப் பெருமாளுக்கு இடமளிக்கக் கூடாதென பொதுஜன ஐக்கிய முன்னணிக்குஆதரவுஅளிக்கமுன்வந்த தமிழ்க்கட்சி ஒன்று அழுத்தம்

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஆட்சியமைக்க ஆதரவு கேட்டு
## ஐ. தே. கட்சி ஈ. பி. டி. பி. யுடன் பேசியது

(ஏறாவூர்)

பொது ஜன ஐக்கியமுன்னணிக்கும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் ஆட்சி அமைப்பது தொடர்பாக உத்தியோக பூர்வமான ஒப்பந்தங்கள் எதிலும் இதுவரை கைச்சாத்திடவில்லை

## இரண்டு முஸ்லிம் பெண்கள் பாராளுமன்றம் செல்கின்றனர்!

ஆர்.யோகராஜனுக்கு தேசியப்பட்டியலில் இடம் வழங்க வேண்டும் என காங்கிரஸ் தலமைப்பீடம் வற்புறுத்தி

பொது ஜன ஐக்கியமுன்னணிக்கும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் இடையில்

பாக உத்தியோக பூர்வமான ஒப்பந்தங்கள் எதிலும் இது வரை கைச்சாத்திடவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியும், ஆட்சி அமைவது தொடர்பாக முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் ரவூப் ஹக்கீமுடனும் ஈ.பி.டி.பி. யுடனும் ஏனைய சிறுபான்மைத் தமிழ்க் கட்சிகளுடனும் பேச்சு வார்த்தை நடாத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# பாராளுமன்றம் செல்கின்றனர்!

(கொழும்பு)

இலங்கைஅரசியல் வரலாற்றில் முதன்முதலாக இரண்டு முஸ்லிம் பெண்கள் பாராளுமன்றம் செல்லவுள்ளனர்.

திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து தேசிய ஐக்கிய முன்னணியின் இணைத் தலைவியும், மறைந்த அமைச்சர் அஷ்ரப்பின் மனைவியுமான பேரியல் அஷ்ரப்பும், மேல் மாகாணத்திலிருந்து ஜே.வி.பியின் தேசிய பட்டியல் உறுப்பினராக ''அர்சாமும்மா'' வுமே முதன் முறையாக பாராளுமன்றம் செல்லவுள்ள முஸ்லிம் பெண்களாவர். (4)

# டக்ளஸ் தேவானந்தாவுக்கு குண்டுதுளைக்காதவாகனம்

ஈ.பி.டி.பிசெயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு குண்டு துளைக்காத கார் வழங்கப்பட்டுள்ளது.

புதிய பாராளுமன்றத்தில் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படவிருப்பதை அடுத்தே அவருக்கு குண்டு துளைக்காத கார்வழங்கப்பட்டுள்ளதுடன் பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள அவரது காரியாலயத்திற்குப் போகும் பாதைகளும் தடை செய்யப்பட்டு பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் திருமலைஎம்.பி இராசம்பந்தன் பாவித்த குண்டு துளைக்காத வாகனமே டக்ளஸ் தேவானந்தாவுக்கு வழங்கப் பட்டுள்ளது. (வ)

# தேர்தல் ஆணையாளர் கோரிக்கை

[கொழும்பு]

தேசியப்பட்டியலில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்களின் பெயர் பட்டியலை இன்று அனுப்பி வைக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா சகலகட்சி செயலாளர்களையும் கடித மூலம் கோரியுள்ளார்

பதினொராவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் நாளை மறுதினம் நடைபெறவிருப்பதாலே யே ஆணையாளர் இக்கடிதத்தை கட்சித் செயலாளர்களுக்கு அவசரமாக அனுப்பி வைத்துள்ளார். [வ-02]

# "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பல் நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து திருமலைக்கான ''சிற்றி ஒவ் றிங்கோ'' பயணிகள் கப்பல் சேவை நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளதாக யாழ். சிவில் நிர்வாக காரியாலயம் அறிவித்துள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள் பயண ஆயத்தங்களுடன் நாலை காலை 7-30 மணிக்கு யாழ். சிங்கள மகாவித்தியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு சிவில் நிர்வாகக் காரியாலயம் மேலும் அறிவித்துள்ளது. (ந-4)

# முதல் பிரசவத்தின் போது நான்கு குழந்தைகள் பிறந்தன!

## பதுளை வைத்தியசாலையில் சம்பவம்

ஒரே சூலில் நான்கு குழந்தைகள் பிறந்த சம்பவம் நேற்று முன்தினம் பதுளை வைத்தியசாலையில் இடம் பெற்றுள்ளது. பண்டாரவளையைச் சேர்ந்த சுனந்த சில்வா (31 வயது) என்ற சாரதியே இந் நான்கு குழந்தைகளின் தந்தையாவார். முதல் பிரசவத்தின் போது பிறந்த இந் நான்கு குழந்தைகளில் இரு ஆண் குழந்தைகளும், இரு பெண் குழந்தைகளும் அடங்குவர். தாயும் குழந்தைகளும் (8ம்பக்கம் பார்க்க)

# எதிர்க் கட்சி வரிசையில் ரெலோஉறுப்பினர் அமர்வர்

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் இருந்து தமிழிழவிடுதலை இயக்கத்தின் (ரெலோ) சார்பில் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யபட்ட மூன்று எம்பிக்களும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருப்பார்கள் (8ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாள்தழ

## சிறு விளம்பரம்

### புலமைப் பரிசில்

Bond, சுந்தர் 1, 2, 3 வெளியீடு – வினாத்தாள்கள் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணிக்கு பரீட்சை நடைபெறும். திகழ் கல்வி நிறுவனம், கே.கே.எஸ் வீதி, இணுவில். [1830]

### இலவசம

கந்தஷஷ்டி கவசம் நூல் பெறவிரும்பும் முருகன் அடியார்கள் தபால் தலையுடன் கூடிய உறையை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு ராஜ மதங்கன் ஏட்டுக்களஞ்சியம், மானிப்பாய் வீதி, பரராஜ. சேகரப்பிள்ளையார்கோவிலடி இணுவில். (1831)

## நுவரெலியாவில் தொடர் மழை

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் அனைத்தும் கடுமையான மழையின் காரணத்தால் மூடப்பட்டன.

ஹற்றன், மொங்கோலியா, நுவரெலியா போன்றமாவட்டங்களில்மழை தொடர்ந்தும் பெய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## சனசமூகநிலையம் திறந்துவைப்பு

[மல்லாகம்]

உரும்பிராய் வடக்கு மக்களின் நிதியுதவியுடனும், சர்வோதய நிதி உதவியுடனும் உரும்பிராய் வடக்கில், 'நவசக்தி சனசமூக நிலையம்' என்னும் பெயரில் புதிதாக சனசமூக நிலையம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இச் சனசமூக நிலையம், கோப்பாய் பிரதேச செயலர் க. கேதீஸ்வரனால் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. (செ-ப-14)

## சமய பாட போட்டி

(சங்கானை)

சங்கானை காளி அம்மன் சனசமூக நிலையத்தினர்சைவ சமய அறிவுப் போட்டியையும், பரிசளிப்பு விழாவையும் சிறப்பாக நடத்தி முடித்தனர்.

இந்நிகழ்வில் வைத்திய கலாநிதி குருநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (க)

## வீதிதிருத்தம்

(அரியாலை)

நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் வீதி திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

வீதியின் இருமருங்கிலும் கற்கள் பறிக்கப்பட்டு கீப்பு கட்டப்பட்டுவருகின்றது.

95ம் ஆண்டு இடப் பெயர்வின் பின் பலத்த சேதமடைந்து காணப்பட்ட இவ் வீதி தற்பொழுதுதான்திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-196)

## மூவின மக்களின், ஒற்றுமையை பேணி பாகுபாடற்ற சமுதாயத்தினை உருவாக்குவேன்

### ரெலோ எம்.பி. தெரிவிப்பு

(வவுனியா)

மூவினமக்கள் வாழ்கின்ற வன்னிமாவட்டத்தில் இன ஒற்றுமையினைக் கட்டிக்காத்து பாகுபாடற்ற சமுதாயத்தினை உருவாக்கப்பாடுபடுவேன்.

வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டுள்ள ரெலோ அமைப்பைச்சேர்ந்த இராசு குகனேஸ்வரன், ஐரோப்பிய வானொலிஒன்றுக்கு அளித்த சிறப்புப்பேட்டியில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேட்டியளிக்கையில்,

எந்த நம்பிக்கையுடன் எனக்கு மக்கள் வாக்களித்தார்களோ அந்த நம்பிக்கை வீண்போகாவண்ணம் நடந்துகொள்வேன்.

வன்னிமாவட்ட விவசாய அபிவிருத்திக்கும், குளங்கள் புனரமைப்புக்கும் முன்னுரிமை கொடுப்பேன் வவுனியா அகதி முகாம்களில் அல்லலுறும் மக்களுக்கு நிரந்தர குடியிருப்பை ஏற்படுத்துவதே எனது முதல்திட்டம் என்று உறுதிபடத் தெரிவித்தார். (உ)

## பிலிப்பைன்ஸ் அதிபர் மீது குற்றம் சுமத்த எதிர்க்கட்சியினர் முஸ்தீபு

(மணிலா)

பிலிப்பைன்ஸ் நாட்டு அதிபர் ஜோசப் ஜெஸ்ராடா மீது நாடாளுமன்றில் குற்றம் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளில் எதிர்க் கட்சிகள் ஈடுபட்டு வருவதாக அறிய முடிகிறது.

பிரபல திரைபட நட்சத்திரமாக விளங்கி, பின்னாளில் பிலிப்பைன்ஸ் நாட்டுக்கே அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜெஸ்ராடா மீது சட்ட விரோத ஊழல் தொடர்பாக எழுந்துள்ள குற்றச் சாட்டுக்களை வெளி உலகத்திற்கு கொண்டுவரும் வகையிலேயே எதிர்க்கட்சிகள் மேற்படி முயற்சியில் மும்முரமாய் ஈடுபட்டு வருகின்றன.

அத்துடன் சட்ட விரோத சூதாட்ட ஊழலுடன் சம்பந்தப்பட்ட அதிபர் பதவியை விட்டு விலக வேண்டும் என பலதரப்பினரிடையேயும் இருந்து எழுந்துள்ள கோரிக்கைகள் எதிர்க் கட்சியினரின் முயற்சிகளுக்குவலு சேர்க்கும் என நம்பப்படுகிறது.

இதே வேளை,

தான் தவறேதும் செய்யவில்லை எனவும் மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்கவில்லை எனவும் ஜோசப் ஜெஸ்ராடாதொலைக்காட்சியில் தோன்றிதனது நிலையை நியாயப்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## தாம்குடியிருக்கும் வீட்டு ஓடுகளை விற்று ஏப்பம்விடும் இடம் பெயர்ந்தோர்

(நல்லூர்)

யாழ்ப்பாணப் பகுதியில் தற்காலிகமாக தங்கியிருக்கும் இடம்பெயர்ந்தோர் தாம் வசிக்கும் வீட்டுஓடுகளை கழற்றி விற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

குருநகர், கொழும்புத்துறை போன்ற பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்தோரில் சிலரே இத்தகைய செயலில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யன்னல்கள், கதவுகள் என்பவற்றையும் இவர்கள்விட்டு வைக்கவில்லையாம்.

இவர்களின் இத்தகைய அடாவடிச் செயலினால் வீட்டு உரிமையாளர்கள் பெரிதும் கவலை அடைந்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் ஒருசிலரின் இத்தகைய செயலினால் இடம்பெயர்ந்தோர் எல்லோரையுமே தவறான கண்ணோட்டத்துடன் நோக்க வேண்டிய துர்ப்பாக்கியநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-செ-103)

## தமிழ் நாட்டு பண்டைய வைத்திய முறை ஜேர்மனி ஆராச்சியில் வெற்றி

(சென்னை)

உடலில் வலியேற்பட்டால் இரத்தம் உறுஞ்சும் அட்டைகளை கொண்டு மாற்றும் தமிழ் நாட்டுமுறை ஜேர்மனியில் கண்டுபிடிப்பு.

உடலில் வலி ஏற்பட்டால் அந்த இடத்தில் இரத்தம் உறுஞ்சும் அட்டைகளை விட்டு இரத்தம் உறுஞ்சப்பட்டதும். குணமாவது தமிழ் நாட்டில் இப்பொழுதும் கிராமப்புறங்களில் நடக்கும்வைத்தியமுறையாகும்.

இந்தச் சிகிச்சை முறையை ஜேர்மன் நாட்டு ஆராச்சி

## பாகிஸ்தான் உட்பட 31 நாடுகளில் அமெரிக்க தூதரகம்மூடிவிடமுடிவு

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் உட்பட 37 நாடுகளில் அமெரிக்கா தனது தூதரகங்களையும் மூடியுள்ளதாக அறிவித்துள்ளது.

மேற்காசிய நாடுகள், தென்னாபிரிக்க நாடுகள் மத்திய கிழக்கு நாடுகள், உட்பட பலநாடுகளில் அமெரிக்கா இந்த முடிவினை மேற்கொண்டது என்று அந்நாட்டு வெளியுறவுச்செயலர் றிச்சேட்பவுச்சர் தெரிவித்தார்.

பலஸ்தீனத்திலுள்ள அமெரிக்க தூதரகத்தின் மீது பாலஸ்தீனத் தீவிரவாதிகள் சரமாரியாகக் கற்கள் வீசியதை அடுத்தும் அமெரிக்கக் கப்பல் குண்டால் தாக்கப்பட்டதைஅடுத்தும் மேற்கு ஆசிய அமைதிப் பேச்சுகளில் அமெரிக்கா எவ்வளவோ முயன்றும் இஸ்ரேலும் பலஸ்தீனமும் உடன்பாட்டுக்கு வராததாலும் இந்த முடிவினை அமெரிக்கா எடுத்ததாகத் தெரிய வருகிறது.

மேற் கூறப்பட்ட முடிவானது 3ம் உலகயுத்தத்திற்கு வழிவகுக்கலாம் என அரசியல்வல்லுநர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர். (க-து)

## யூகோசிலாவியாவிற்கு உதவ ஐரோப்பிய ஒன்றியம் முயற்சி

(பெல்கிஹேட்)

ஐரோப்பிய ஒன்றியம் யூகோசிலாவியாவிற்கு 173 மில்லியன் டொலர்களை உதவ முன்வந்துள்ளது.

புதிய ஜனாதிபதியாகத் தெரிவான வோர்ஸோவின் பதவி ஏற்பிற்குப்பின் ஐரோப்பிய ஒன்றியம் வழங்க இருக்கும் முதல் உதவி இதுவாகும்.

மனிதாபிமான தேவைகளுக்காகக்கொடுக்கப்படும்நிதியின் செயற்பாடுகளைப் பொறுத்தும் அரசியல் செயற்பாடுகளைப் பொறுத்தும் மேலும் நிதியினை வழங்க இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யூகோசிலாவிய ஜனாதிபதி ஐரோப்பிய நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களைச் சந்திக்கும் கூட்டம் ஒன்று ஏற்பாடாகி உள்ளது. (து)

## யாழ். பல்கலை மருத்துவபீட மாணவியின் நகைகள் வைத்தியசாலையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)


யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவியின் நகைகள் யாழ். போதனா

வி. மீரா (வயது 23) எனபவரே பிரஸ்தாப பல்கலைக் கழக மருத்துவ பீடமாணவியார் (க-02)

கொண்டார். (க)

அந்த இடத்தில் இரத்தம்

## நன்றி கூறுகிறோம்



கடந்த பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட எனக்கும் எமது கட்சிக்கும் ஆதரவளித்த வாக்காளப் பெருமக்களுக்கும் இந்த நெருக்கடியான சூழ்நிலையிலும் எம்முடன் ஒத்துழைத்து உதவிகள் செய்த அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக.

தொடர்ந்தும் மக்கள் சேவையில் ஈடுபடுவேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்றும் உங்கள் சேவையில்

**ச. மூத்துலிங்கம் ஜே. பி.**

முன்னாள் உடுவில் கிராமசபைத் தலைவர்

(கி-885)

இந்தச் சிகிச்சை முறையை ஜேர்மன் நாட்டு ஆராச்சியாளர்களும் மூட்டு வலி நோய்க்கு பயன்படுத்துகிறார்கள்.

ஜேர்மனியில் விசன் என்னும் இடத்தில் உள்ள ஆராச்சி நிலையத்தில் இந்த முறை பல அற்புதமான பலனைத்தருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## ஓடு திருடியவர் மன்றில் ஆஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பகுதியில் பெருந்தொகையானஓடுகளை திருடினார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பேரை யாழ்ப்பாண பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

சவரி குணசீலன் செல்வம் அன்ரனி ஞானசீலன் அன்ரனி மகாதேவன் மகேந்திரன் ஆகியோர்களை இம்மாதம் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் கையளிக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவு விட்டுள்ளது. (12)

யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவியின் நகைகள் யாழ். போதனா வைத்திய சாலையில்திருட்டுப் போன சம்பவம் ஒன்று அண்மையில் இடம் பெற்றுள்ளது.

சம்பவதினம் பிரஸ்தாப இளம் யுவதி தனது நகைகளை கழற்றி கட்டில் மெத்தைக்குள் வைத்து விட்டு சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டதாகவும் பின்னர் வந்து பார்த்த போது குறிப்பிட்ட நகைகள் களவு போய்விட்டதாகவும் தெரியவருகிறது சத்திர சிகிச்சை மற்றும் இதர தேவைகளுக்கு வைத்திய சாலைக்கு வருபவர்கள் நகைகளை அணிந்து வர வேண்டாம் என்றும் எளிமையான சேலைகளையே அணிந்து வரவேண்டும் என்று வைத்திசாலை நிர்வாகம் பணித்துள்ளதாம்

பவரே பிரஸ்தாப பல்கலைக் கழக மருத்துவ பீடமாணவியார் (க-02)

## முதியோர்தின விழா

(யாழ்ப்பாணம்)

முதியோர்தின விழா சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் இவ்முதியவர்களை கௌரவித்து பரிசில்கள் வழங்கப்பட்டன இந்நிகழ்விற்கு ஓய்வுபெற்ற வலிமேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராஜா பிரதம விருந்தினராகவும் சண்டிலிப்பாய் உதவிக் கல்விப்பணிப்பாளர் கே. தனபாலசிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். (வ-12)


## டைனமோ தேவை

**20 கே. வி. வலுவுள்ள 3 பேஸ்**

டைனமோ உடன் தேவை

விற்பனைக்கு வைத்திருப்போர் நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**'வலம்புரி'**

**இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்**

## தொலை பேசி இணைப்புகள் அதிகரிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனம், கடந்த வருடம் 1 லட்சத்து 33 ஆயிரத்து 709புதிய தொலைபேசி இணைப்புகளை புதிதாக வழங்கியுள்ளது.

இதனுடன் நாடு முழுவதிலும் 5லட்சத்து89 ஆயிரத்து 307 இற்கும் அதிகமான தொலைபேசி இணைப்புக்கள் நாடு முழுவதிலும் வழங்கப்பட்டுள்ளது. (உ)

## குழந்தை பலி

(கிளிநொச்சி)

வயிற்றோட்டத்தினால் 6 மாதக் குழந்தை ஒன்று பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று ஒட்டுசுட்டான் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

ஒட்டுசுட்டான் இரத்தின மடுவைச்சேர்ந்த கஜரூபன் என்னும் பிரஸ்தாப குழந்தையே பரிதாபகரமாக உயிரிழந்ததாகும். (க)

# தமிழர் நலன்பேணவும்,பிரதேச அபிவிருத்திக்கும் நம்மை நாம் இதய சுத்தியுடன் அர்ப்பணிப்போம்

### தேர்தல் வெற்றி குறித்து ஈ.பி.டி.பி.தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய சூழ் நிலையில் எமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அபிவிருத்தியின்றிக்கிடக்கும்நமது தாயகப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யவும், நம் தமிழ் மக்களின் ஒவ்வொரு சிறு துளியிலும் அக்கறை கொண்டு அவர்களின் முன்னேற்றத்திற்கு நம்மை நாம் அர்ப்பணிப்போம்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினர் தமது தேர்தல் வெற்றி தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

நடந்து முடிந்த பதினோராவது பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் ஈ.பி.டி.பி. கட்சிக்குத் தந்த காத்திரமான ஆதரவுக்கு நாம் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நாம் யாழ். மாவட்டத்தில் நான்கு ஆசனங்கள் பெற்று அதன் அரசியல் தலைமையைக் கைப்பற்றியுள்ளதுடன் அம்பாறைமாவட்டத்தில் ஒரு ஆசனத்தை ஈட்டி அங்குஆபத்துக்குள்ளாகியிருந்த தமிழ் மக்களுக்கான அரசியல் பிரதிநிதித்துவத்தை ஈட்டிக் கொடுத்துமுள்ளோம்.

மக்கள் தமது தீர்ப்பின் மூலம் தமிழ் மக்களுக்கு ஓர் ஆளுமையுள்ள தலைமைத்துவத்தை நிலைநிறுத்தவேண்டிய காலத்தின் தேவையை நிறைவேற்றியுள்ளார்கள். அதனால் இன்று இந் நாட்டின் அரசாட்சியைத் தீர்மானிக்கும் தீர்க்கமான அரசியல் சக்தியாக ஈ.பி.டி.பி. தமிழ் பேசும் மக்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

அதனால் எமது கட்சியை கூட்டரசாங்கம் அமைக்க நாடவேண்டியதேவை ஆளும் கட்சிக்கு ஏற்பட்டுள்ளது. எமக்கு அதிகூடிய அதிகாரங்களுடனான அமைச்சொன்றையும் சில பிரதி அமைச்சர் பொறுப்புக்களையும் வழங்குவதற்கு ஆளும் கட்சி முன் வந்துள்ளது. இதை எமது மக்களுக்குக்கிடைத்த கௌரவமாகவே நாம் கருதுகிறோம். இது எமது இனிய மக்களின் விவேகமிக்க பேராதரவால்தான் சாத்தியமாகியுள்ளது.

இத்தகைய வரலாற்றுச் சந்தர்ப்பத்தையும் எமக்குக் கிடைத்துள்ள மக்கள் பலத்தையும் நாம் பொறுப்புணர்வோடும் விவேகத்தோடும் வினைத் திறனோடும் பாவித்து தமிழ் பேசும் மக்களுக்கு அர்த்தபூர்வமான அரசியல் தீர்வொன்றைக் காணவே நாம் முதன்மையாக உழைப்போம்.

அத்துடன் நில்லாது எம் மக்களுக்கான பாதுகாவலனாக நின்று அவர்களின் இன்னல்களுக்கு முகம் கொடுத்து உரிய நடவடிக்கைகளில் இறங்குவோம். எம் பாராளுமன்றப் பிரதிநிதிகள் தெரிவான மாவட்டங்களில் மட்டுமன்றி சகல தமிழ் பேசும் பிரதேசங்களதும் தேவைகளையும் பூர்த்திசெய்யும் வகையில் எமது சேவை பாரபட்சமின்றியும் நேர்மையாகவும் மிக வினைத்திறனுடனும் இருக்குமென்று நாம் உறுதியளிக்கிறோம்.

தமிழ் மக்கள் ஆதரவுடன் மென்மேலும் பலம்பெற்று எமது அரசியல் இலக்குகளை வெற்றிகொள்வோம், என்ற நம்பிக்கையுடன் இன்று எமது கரங்களைப் பலப்படுத்தியுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு எமது நன்றியை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறோம். நாம் என்றும் எமது மக்களோடிருப்போம்!

இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கிளிநொச்சியில் பெருமழை இடம் பெயர்ந்தோர் அவலம்

(வவுனியா)

கிளிநொச்சி மாவட்டத்தில் பெருமழை பெய்து வருவதனால் இடம் பெயர்ந்து அங்கு தங்கியுள்ள சுமார் 3 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்கள் தங்கியுள்ள குடிசைகள் சுமார் நான்கு ஆண்டுகளாக வேயப்படாத நிலையில் உள்ளதாலேயே வீடுகளில் வெள்ளம் புகுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் 48 இடங்களில் 5909 குடும்பங்களைச் சேர்ந்த 24750 பேர் தங்கியுள்ளனர்.

கரச்சியில் 18 இடங்களிலும், கண்டாவளையில் 7 இடங்களிலும் பூநகரியில் 23 இடங்களிலும் இக் குடியிருப்புக்கள் அமைந்துள்ளன.

இதே வேளை இடம் பெயர்ந்து அல்லற்படும் இம் மக்களுக்கு எந்தவொரு அரசசார்பற்ற அமைப்பும் உதவவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது. (வ)

## மின்சார தாக்குதலுக்குள்ளாகியவர் தெய்வாதீனமாக உயிர்பிழைத்தார்

(ஈச்சமோட்டை)

மின்சார தாக்குதலுக்குள்ளாகி தூக்கி வீசப்பட்டவர், தெய்வாதீனமாக உயிர்பிழைத்துள்ளார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பளைப்பிரிவில் கடமைபுரியும் க.அரியரெட்ணம் (வயது 52) என்பவரே இவ்வாறு மின்சாரதாக்குதலுக்குள்ளானவர்.

அலுவலக இடைவேளையின்போது தேநீர் தயாரிப்பதற்காகமின்சாரவெப்பமாக்கியை கையாண்ட போது, அவ்வுபகரணத்தில் ஏற்பட்ட மின் ஒழுக்கின் காரணமாகவேஇவர்மின் அதிர்ச்சிக்குள்ளாகினார்.

மின் அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்கு பல மணிநேரம் எடுத்ததாகவும்,இவரின் உடலின் ஒருபக்கம் கருமையான வலிக்குட்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-59)

## சீரற்ற மின் விநியோகம் உரும்பிராய்,மல்லாகம் மக்கள் அவதி

(மல்லாகம்)

விநியோக முறையினால்,

# நவீன கல்வி பயிற்சித்திட்டத்தை கூட்டுறவுத்துறையில் உருவாக்கவேண்டும்

### ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவு உத்தியோகத்தர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்களில் பணி புரியும் பணியாளர்களுக்கும் தனித்தனியாக நவீன முறையில் அமைந்த தான நன்மை பயக்கக்கூடிய கல்விப் பயிற்சி அளிப்புத்திட்டத்தை உருவாக்கவேண்டும். இத்தகைய திட்டம் ஒன்றை தயாரிப்பதில் தற்போதுநான் ஈடுபட்டுள்ளேன்.

இவ்வாறு யாழ்ப்பாணகூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள்,பொது முகாமையாளர்கள் மத்தியில் உரையாற்றிய வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் எஸ். சுப்பிர மணிய சர்மா தெரிவித்தார்.

இக் கூட்டத்தில்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களினதும் பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் இரண்டாம் படிச்சங்கங்களினதும் மாவட்ட மட்

நவீன மயப்படுத்தப்பட்ட கூட்டுறவுப் பயிற்சித் திட்டம் ஒன்றை தயாரிக்கத்திட்டமிட்டுள்ளேன்.

இத்திட்டம் தொடர்பாக கூட்டுறவு பயிற்சி கல்லூரி அதிபர்விரிவுரையாளர்களுடன் கலந்தாலோசித்து தயாரிக்கவுள்ளேன்.

கூட்டுறவுப் பயிற்சி முடித்தவர்கள் எப்படியாவது கூட்டுறவுத் துறைக்குள் நுழைய வேண்டுமென எதிர்பார்க்கக் கூடாது.நாம் படிப்பது எல்லாம் தொழில் தரும் என்று எண்ணக் கூடாது. இப்பயிற்சிகளின் மூலம் பெறும் அனுபவங்களைக் கொண்டு எந்தத் துறையில் முன்னேற முடியுமோ அத்துறைகளை இனங்கண்டுஅத்துறையில்முன்னேற வேண்டும்.இதற்கேற்ற வகையில் இப்பயிற்சிகள் அமைய வேண்டுமெனவும் கூறினார்.

தற்போதைய கூட்டுறவுப் பயிற்சி முறையிலிருந்து எத்தகைய பயிற்சிகளை சங்கப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டுமென்பது குறித்து கூட்டுறவு ஆணையாளர் சங்கத்தலைவர்கள்,பொது முகாமையாளர்களிடம் இருந்து அறிந்து கொண்டதாகவும் தெரிவித்தார். (க)

## இம்முறை தேர்தலில், நான்கு அமைச்சர்கள் உட்பட பா.உறுப்பினர்கள் பலர் தோல்வி

(கொழும்பு)

திலும் வெற்றிபெறவில்லை.

## உரும்பிராய்,மல்லாகம் மக்கள் அவதி

(மல்லாகம்)

யாழ்.குடாநாட்டின் சில இடங்களிற்கு வழங்கப்படும் மின்சாரம்,அண்மைக்காலங்களில் சீரில்லாமல் இருப்பதாக சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

மல்லாகம்,உரும்பிராய் பகுதிகளிலேயே இவ்வாறு சீரற்ற முறையில் மின்சாரம் வழங்கப்படுவதாக தெரிய வந்துள்ளது.

ஓர் ஒழுங்கு முறையில் மின்சாரம் வழங்கப்படாது, நினைத்த நேரத்தில் வந்து மின்னி மறையும் இவ் மின் விநியோக முறையினால், மாணவர் மட்டத்தினர் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறு மின் விநியோகம் மேற்கொண்டாலும், அதில் ஓர் ஒழுங்கு முறையினை ஏற்படுத்துவதுடன் அது குறித்த விபரத்தினையும்,விளக்கத்தினையும் பொதுமக்களிடையே அறியச் செய்யவேண்டியது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கடமை என பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-14)

பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களினதும் இரண்டாம் படிச்சங்கங்களினதும் மாவட்ட மட்டங்களினதும் பொது முகாமையாளர்களும் கலந்து கொண்டனர்.

அவர் அங்கு மேலும் பேசுகையில் கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான பயிற்சித்திட்டம் ஒன்றை தயாரிப்பதில் தற்போது ஈடுபட்டுள்ளேன் என்றும் இத்திட்டம் தொடர்பாக கூட்டுறவு உத்தியோகத்தர்களுடன் கலந்து பேசவுள்ளேன் என்றும் தெரிவித்துள்ளார்.

இதே போன்று கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும்

## பா.உறுப்பினர்கள் பலர் தோல்வி

(கொழும்பு)

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலின் 4 அமைச்சர்கள் உட்பட 47 பாராளுமன்ற உறுப்பினர்கள் தோல்வியடைந்துள்ளனர்.

இவர்களில் 24 பேர் பொதுஜனஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள்.18 பேர் ஐக்கிய தேசியக்கட்சி சார்பாக போட்டியிட்டவர்கள்.

ஐக்கிய தேசியக்கட்சி மாற்றுக்குழுவைச் சேர்ந்த பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து போட்டியிட்ட மூவர் தேர்தலில் தோல்வியடைந்துள்ளனர்.

அத்துடன்,இலங்கை தமிழ் காங்கிரஸ் தனித்துப் போட்டியிட்ட எந்தவொரு இடத்திலும் வெற்றிபெறவில்லை.

இதேசமயம்,57 பேர் முதல் தடவையாக பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.

இவர்களில்,அதிக எண்ணிக்கையானோர் அதாவது 26 பேர் ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்தவர்கள்.

பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த 17 பேரும் முதல் தடவையாக பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

ஜே.வி.பி. சார்பாக பாராளுமன்றத்திற்குத் தெரிவான 10 பேரில் 9 பேர் முதல் தடவையாகப் பாராளுமன்றத்திற்குத் தெரிவாகியுள்ளனர். (உ)

## கண்டி மாவட்டத்தில் தமிழர் பெரும் வெற்றி பெற முடியவில்லை

### தமிழ் வாக்காளர் விசனம்

(கண்டி)

நடைபெற்று முடிந்த தேர்தலில் கண்டி மாவட்டத்தில் பல்வேறு அரசியல் கட்சிகளின் சார்பில் 43தமிழர் போட்டியிட்டும் ஒருவர் கூட பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படவில்லையென தமிழ்பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

65ஆயிரம் தமிழ் வாக்காளரைக் கொண்ட கண்டி மாவட்டத்தில் மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ்.குணரத்தினம்சுமார் 18ஆயிரம் வாக்குகளைப் பெற்ற போதும் கூட அவரால் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரியவாக முடியவில்லையெனக் கவலை தெரிவிக்கப்படுகிறது. (க-வ)

## உடைக்கப்பட்ட நிலையில் மக்களை வந்தடையும் கடிதங்கள்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்துஇங்கு அனுப்பப்படும் கடிதங்களில் பெரும் பாலானவை உடைக்கப்பட்ட நிலையிலேயேவருவதாக பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இத்துடன் இங்குள்ளவர்களுக்கு அனுப்பப்படும் புகைப்படங்கள் நீண்ட காலத்தின் பின்பே சம்பந்தப்பட்டவர்களுக்குகிடைத்து வருவதாகவும்குற்றம் சாட்டப்படுகிறது. (க)


# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை 2000

## கணிதம் பகுதி-1

நேரம்:- 1மணி

யாழ். சி. டி. பல்குணன்லாலா
மல்லாகம் மகா வித்தியாலயம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.




21) $\triangle$ ABC இல் $B\hat{A}C = 72$ பாகை, BC=9Cm AC = 11Cm எனின் $\triangle$ இன் பக்கங்களை ஏறு வரிசையில் தருக.

22) சாய் சதுரமொன்றின் மூலை விட்டங்கள் முறையே 16Cm, 12 Cm

(அ) சாய்சதுரத்தின் ஒரு பக்க நீளம் யாது?

(ஆ) சாய் சதுரத்தின் பரப்பளவு யாது?

23) 25லீற்றர் பாலினை, ஒவ்வொன்று 0.7 லீற்றர் கொள்ளளவுடைய பாத்திரங்களில் நிரப்பினால்
(அ) எத்தனை பாத்திரங்களில் நிரப்பலாம்?
(ஆ) மீதியாக எவ்வளவு பால் இருக்கும்?

24) 1;500 என்ற அளவிடையில் விவசாயப் பண்ணையொன்றின் படம் வரையப்பட்டுள்ளது.
(அ) படத்தில் 8 Cm நீளமாகக் காட்டப்பட்ட வாய்க்காலின் நீளம் எத்தனை m எனத் தருக.
(ஆ) படத்தில் கீரைப்பாத்தியொன்றின் பரப்பளவு 120 $Cm^2$ எனின் கீரைப் பாத்தியின் பரப்பளவு எத்தனை $m^2$ எனக் காண்க.

25) கோடாத இரு நாணயங்களைச் சுண்டும் போது
(I) தோன்றக் கூடிய பேறுகளின் மாதிரி வெளியைத் தொடைவடிவில் காட்டுக.
(II) இரு நாணயங்களுள் ஒன்றிலாயினும் தலை தோன்றுவதற்கான நிகழ்தகவு யாது?

26) (i) பெறுமானம் காண்க. மட $_2 32$

(II) சுருக்குக: மட $\frac{1}{7}$ + மட 7

27) மணிக்கு 30 Km சீரான கதியில் ஓடும் வாகனம் நகரம் A இலிருந்து நகரம் B இனை 4 மணித்தியாலங்களில் அடைகிறது.
(அ) நகரங்கள் A,B என்பவற்றிற்கிடையிலான தூரம் யாது?
(ஆ) இதே தூரத்தை மணிக்கு 80 Km கதியில் செல்லும் வாகனம் கடக்க எடுக்கும் காலம் யாது?

28) ஒருவர் ரூ 20 பங்குகளில் 50 ஐ வாங்குவதற்கு ரூ 900 ஐ செலவளித்தார்.
(அ) அவர் பங்கொன்றை என்ன விலையாக வாங்கினார்?
(ஆ) அவர் வாங்கிய பங்குகளின் பெயர் மாத்திரையான பெறுமானம் யாது?

29) $\frac{1}{7}$, $\frac{1}{2}$, $\frac{1}{3}$, $\frac{1}{5}$ என்பவற்றை ஏறுவரிசையில் தருக.

30) இரண்டு ரூபா நாணயமொன்றின் விட்டம் 3 Cm. ஐந்து ரூபா நாணயமொன்றின் விட்டம் 2 Cm. இரண்டு ரூபா நாணயம் நிலையாகவிருக்க, இரு நாணயங்களும் ஒன்றையொன்று வெளிப்புறமாகத் தொட்டவாறு கிடையான தளத்தில் வைக்கப்பட்ட நிலையில் ஐந்து ரூபா நாணயம் நகர்கிறது. ஐந்துரூபா நாணயத்தின் மையத்தின்ஒழுக்கு யாது?

## விடைகள்

நேற்றும்; இன்றும் வெளியான கணிதம்பகுதி 1 வினாக்களுக்கான விடைகள்

1) 3141
2) (அ) 360 பாகை
(ஆ) 135 பாகை
3) (அ) 3
(ஆ) பூச்சியம்
4) 44 cm
5) $(X \cap Y)'$ அல்லது $X' \cup Y'$
6) (அ) ரூ 500
(ஆ) ரூ 475
7) 6210
எட்டு
8) (அ) x=20 பாகை
(ஆ) 110 பாகை
9) (அ) $600m^2$
(ஆ) 6 எயர்
10) (x−3) (x+5) =O
11) (அ) மூன்று மடங்கு
(ஆ) ஒன்பது மடங்கு
12) $\frac{1}{1000}$
13) 10.5 cm
14) x=6
15) $t=\frac{1}{2-c}$
16) 330
17) 440 லீற்றர்
18) 0.526809
19) 44kg
20) AB,BC,CA
21) (அ) $A\hat{O}B=2A\hat{D}B$
(ஆ) $C\hat{A}D$
22) (அ) 10cm
(ஆ) 96cm2
23) (அ) 35
(ஆ) 0.5 லீற்றர்
24) (அ) 40m
(ஆ) 3000 m2
25) (அ) [ (த,த), (த,பூ), (பூ,த), (பூ,பூ) ]
(ஆ) $\frac{3}{4}$
26) (அ) 5
(ஆ) 0
27) (அ) 120 km
(ஆ) $1\frac{1}{2}$ மணி
28) (அ) ரூ 18
(ஆ) ரூ 1000
29) $\frac{1}{7}$, $\frac{1}{5}$, $\frac{1}{3}$, $\frac{1}{2}$
30) 2 ரூபா நாணயத்தின் மையத்தை மையமாகவும் 2.5cm ஆரையுமுடைய வட்டத்தின் பரிதி

## புகையிலை நாற்றுமேடைகள் அமைப்பு

[இணுவில்]

இணுவில், உடுவில், பாலாவோடை பகுதி விவசாயிகள் புகையிலைக் கன்று நாற்று மேடைகள் அமைப்பதில் துரிதமாகஈடுபட்டுவருகின்றனர்.

அத்துடன் இப் பகுதி விவசாயிகள் பலர், தமது பயிர் செய் நிலங்களில் சணல் விதைப்பினை மேற்கொண்டு வருவதையும் அவதானிக்க முடிகிறது. (உ-49)

## கொக்குவிலில் குழாய்க்கிணறு

[யாழ்ப்பாணப்]

கொக்குவில் மேற்கு தேங்காய் மூலைப் பகுதியில் குழாய்க் கிணறு அமைக்கும் பணி துரிதகதியில் இடம் பெற்று வருகிறது.

இப்பகுதி சனசமூக நிலையத்தினர் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க. மணிபல்லவராயனுக்கு விடுத்த வேண்டுகோளையடுத்து இப் பணி இடம் பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## கால்வாய் செப்பனிடல்

(மல்லாகம்)

மானிப்பாய் மத்தி வீதிக் கரையோரங்களிலுள்ள கழிவு நீர் கால்வாய்கள் செப்பனிடப்பட்டு வருகின்றது.

மழை காலம் ஆரம்பித்துள்ளதனால், வீதியில் வெள்ள நீர் தேங்கி நிற்காது இக்கால் வாய்களினூடாகச் செல்வதற்கு ஏதுவாகவே கால்வாய்கள் செப்பனிடப்பட்டு வருகின்றது. (செ-ப-14)

## கூட்டுறவுப் பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியில் இவ்வாண்டுக்கான இரண்டாவது கூ. ப. த. பத்திர சாதாரண பயிற்சி நெறி இம்மாதம் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. (செ)

## ஐ. தே. க. வேட்பாளர் மனோ கணேசனுக்கு விரைவில் எம். பி: பதவி

### உயர் மட்டம பகீரத முயற்சி

[கொழும்பு]

நடைபெற்று முடிந்த தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி தலைவர் பெ. சந்திரசேகரன் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பல தடவைகள் பேச்சு

# ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த பலர்

# ஒரேகுடும்பத்தைச் சேர்ந்த பலர் பா. உறுப்பினர்களாக தெரிவு

(யாழ்ப்பாணம்)

பதினோராவது பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் இரத்தினபுரி, மாத்தளை, கொழும்பு, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் இம்முறை பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களாக, தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள்.

கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் இந்திக குணவர்த்தனாவும் அவரது சகோதரர்களான தினேஷ் குணவர்த்தனா, பந்துல குணவர்த்தனா ஆகிய இருவரும்;பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவாகினர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் போட்டியிட்ட பிரதிசுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியும் அவரது தந்தையான தர்மதாசா வன்னியாராச்சியும் தெரிவாகினர்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தில் போட்டியிட்ட முன்னாள் மீன்பிடி நீரியல்துறை அமைச்சர் மகிந்தராஜபக்ஷாவும் அவரது சகோதரரான காமல் ராஜபக்ஷாவும் தெரிவாகியுள்ளனர்.

இதேவேளை மாத்தளை மாவட்டத்தில் போட்டியிட்ட அஜித் அலுவிகாராவும் அவரது மகனான ரஞ்சித் அலுவிகாராவும் வெற்றி பெற்றுள்ளனர். (க-2)

# தனியார் ஆங்கில மருந்துக் கடைகளில் உச்சவிலையில் குளிகைகள் விற்பனை

## பொது மக்கள் புகார்

(அரியாலை)

குடாநாட்டிலுள்ள தனியார் ஆங்கில மருந்துக்கடைகளில் ''ஆனைவிலை குதிரைவிலை''க்கு மருந்துகள் விற்கப்படுவதாக பொது மக்களால் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

திருநெல்வேலிச் சந்தியிலுள்ள பிரபல ஆங்கில மருந்துக் கடையொன்றில் 100 மில்லிக் கிராம் தைரொக்ஸின் குளிகை ஒன்று ஒரு ரூபாவாக விற்கப்படுகின்றது.

ஆனால் உண்மையிலேயே இக் குளிகையின் விலை 35 சதம் முதல் 40 சதம் வரையே விற்பனையாவது குறிப்பிடத்தக்கது.

மருந்து விற்பனையாளர்கள் யாழ். குடாநாட்டின் தற்போதைய சூழ்நிலையில் மருந்து வகைகளுக்கு நிலவும் தட்டுப்பாட்டைக் காரணம் காட்டி நோயாளர் வயிற்றில் அடிக்கிறார்கள்.

சம்பந்தப்பட்ட மருந்து விற்பனையாளர்கள் இவ்வாறான அநீதியான செயலைச் செய்வதனால் பாவத்தைச் சம்பாதித்துக் கொள்வதாக மக்கள் மத்தியில் பரவலாக கருத்து தெரிவிக்கப்படுகிறது. (செ-106)

[கொழும்பு]

நடைபெற்று முடிந்த தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசிய கட்சி சார்பாக போட்டியிட்ட மனோ கணேசனுக்கு தேசியப் பட்டியல் அடிப்படையில் எம். பியாகும் வாய்ப்பு நிலவுவதாக பரவலாக கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இது விடயம் சம்பந்தமாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ. சந்திரசேகரன் ஐக்கிய தேசிய கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பல தடவைகள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளையில்கொழும்பு வாழ் தமிழர்கள்பலர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்ததும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கது. (க-உ)

## நாடகம் பார்க்கச்சென்ற நபர்

# மோட்டார் சைக்கிளை பறிகொடுத்தாராம்

## இணுவிலில் சம்பவம்

(இணுவில்)

நாடகம் பார்க்கச்சென்ற நபர், பல ஆயிரம் பெறுமதியான மோட்டார் சைக்கிளைப் பறிகொடுத்தார்.

மேற்படி சம்பவம் இணுவில் கந்தசுவாமி கோவில் சுற்றாடலில் இடம்பெற்றுள்ளது.

கடந்த விஜயதசமி தினத்தன்று ஆலய இளம்தொண்டர்சபை சைவப்பணிமனையில் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றவேளை அதனைப் பார்வையிடச் சென்றவர் ஒருவரின் மோட்டார் சைக்கிளே திருட்டுப் போயுள்ளதாக தெரியவந்துள்ளது.

இவ் ஆலயத்தில் தரிசனத்திற்கென செல்லும் பக்தர்கள் பலரது துவிச்சக்கரவண்டிகள் முன்னைய காலங்களிலும் இவ்வாறு திருட்டுப் போயிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேசமயம், இவ்வாறான விழாக்கள் நடத்தும்போது, பார்வையிடச் செல்வோரது போக்குவரத்துச் சாதனங்களை பத்திரமாய் விடுவதற்கு ஏற்றஇட ஒழுங்கு செய்யப்படவேண்டியது ஏற்பாட்டுக் குழுவினரின் கடமையெனவும் பொதுமக்கள் தரப்பில் வலியுறுத்தப்பட்டுள்ளது.(உ-49)

### இன்று ஒரு தகவல்

## மனிதன் தன்பிழையை உணர்ந்தால் மன்னிக்கப்படுவான்

ஒரு நாள் ஒரு வியாபாரி பணப்பையுடன் வீட்டை நோக்கி போய்க்கொண்டிருந்த போது, ஒரு இளைஞன் சட்டெனப் பாய்ந்து வியாபாரியிடமிருந்து பையைப் பிடுங்கிக்கொண்டு ஓடலானான். வியாபாரி ''திருடன், திருடன், பிடி, பிடி'' என்று உரக்கக் கத்தவே சிலர் அந்த இளைஞனை துரத்திப் பிடித்து அவனை காவலதிகாரியிடம் ஒப்படைத்தார்கள்.

அந்த இளைஞன் காவலதிகாரியின் கால்களில் விழுந்து ''தெரியாமல் செய்து விட்டேன், என்னை மன்னியுங்கள்'' என்று கெஞ்சினான். காவலதிகாரியோ ''தெரியாமலா செய்தாய் திருட்டு பயலே'' என்று உறுமியவாறு அவனைத்தன் காலால் எட்டி உதைத்தார். அவன் சற்று தூரத்தில் போய் விழுந்தான். அப்படி விழுந்த மறுகணமே அவன் எழுந்து வேகமாய் தப்பி காட்டுக்கு ஓடிவிட்டான்.

அவன் காட்டிற்குள் தட்டுத் தடுமாறி நடந்ததால் அவன் காலில் ஏதோ இடற, குப்புற பாறாங்கல் மீது விழுந்து மயக்கமானான்.

சற்று நேரத்தின் பின் பக்கத்திலிருந்த அந்த குடிசையிலிருந்த முனிவர் வெளியே வந்த போது, இளைஞனைப் பார்த்தார். தண்ணீர் கொண்டு வந்து அவனது முகத்தில் தெளித்தார். பிறகு அவனை எழுப்பி தன் குடிசைக்கு அழைத்துச் சென்றார்.

அந்த முனிவரின் குடிசையில் சிலநாட்கள் இருந்த அவன் முனிவரிடம் ''சுவாமி நான் இங்கேயே இருந்து தங்களுக்குப் பணிவிடைகள் புரியவே விரும்புகிறேன் எனக்கு இதற்கு அனுமதி அளிக்க வேண்டும்'' என்று வேண்டினான். அவரும் அனுமதிக்கவே, அந்த இளைஞன் அவரது வாழ்க்கை முறையைக் கண்டு தன் போக்கையும் மாற்றிக் கொண்டு வந்தான்.

சில ஆண்டுகள் கழிந்தன. முனிவரும் பரலோகப் பிராப்தி அடைந்தார். அதன் பின் இளைஞனான அவரது சீடன் சதானந்த சுவாமி என்ற பெயருடன் அங்கேயே இருக்கலானான்.

சதானந்தர் பின் ஒரு நாள் நகரிற்குச்சென்று தனது கருத்துக்களை பரப்பலானார். மக்கள் அமர்ந்து அவர் சொல்வதை அமைதியாகக் கேட்டனர்.

பின்பு கூட்டத்திலிருந்த கிழவன் ஒருவன் சதானந்தரை தனியாக சந்தித்து ''சுவாமிகளே! நான் பகவானின் திருவடிகளை அடைந்தால் பெரிதும் மகிழ்வேன்'' நான் இவ் ஊர்க் காவலதிகாரியாக இருந்த போது குற்றவாளிகளை துன்புறுத்தி இருக்கிறேன். அதனால் பகவான் எனக்கு அருள் புரிவாரா என்று சந்தேகப்படுகிறேன்'' என்றான்.

சதானந்தரும் ''அன்பரே! கண்டிப்பாக உங்களுக்கு அவரது அருள் கிட்டும். ஒரு காலத்தில் நானும் குற்றவாளிஆகி உங்கள் முன் நின்று உங்கள் காலால் உதையும் வாங்கி இருக்கின்றேன். அன்று உங்கள் காலில் நான் விழுந்தேன். இன்று நீங்கள் என் காலில் விழுகிறீர்கள். என்ன விசித்திரம் பார்த்தீர்களா? பகவானால் ஒரு திருடனிற்கு அருள் புரிய முடிந்ததென்றால், திருடனை கண்டிக்கும் காவலதிகாரிக்கு கருணை காட்டாமலா இருப்பார்? என்று கூறி தன் பழைய கதையை விபரமாகச் சொன்னார்.

நன்றி
**அம்புலி**

முடிவடைந்த தேர்தல் தொடர்பாக

# வெளிநாட்டு கண்காணிப்பாளரின் அறிக்கை முற்றிலும் தவறானது

(கொழும்பு)

நடந்து முடிந்த பாராளுமன்ற பொதுத் தேர்தல் தொடர்பான வெளிநாட்டுக் கண்காணிப்புக் குழுவினரின் கணிப்பு தவறானதென உள்ளூர் தேர்தல் வன்செயல் கண்காணிப்புக் குழுநிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

வெளிநாட்டில் இருந்து தேர்தல் கண்காணிப்பிற்கென இங்கு வந்த குழுவினர், நீதியாகவும் நியாயமான முறையிலும் தேர்தல் நடைபெற்றதாக அறிக்கை மூலம் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் தினத்தன்று எமது கணிப்பின் படி நாடெங்கிலுமுள்ள 573 வாக்குச்சாவடிகளில் தேர்தல் மோசடிகள் இடம் பெற்றுள்ளது.

இந்நிலையில், உண்மைக்குப் புறம்பானவகையில் வெளி நாட்டுக் கண்காணிப்பாளர் குழு அறிக்கை விடுத்துள்ளது.

நடந்து முடிந்த தேர்தல் வன்செயல்கள், மோசடிகள் நிறைந்ததென எம்மால் நிரூபிக்க இயலும்.

கொழும்பு மாவட்டத்தில் 33 வாக்குச் சாவடிகளிலும் கம்பகா மாவட்டத்தில் 55 வாக்குச்சாவடிகளிலும் யாழ். மாவட்டத்தில் 33 வாக்குச் சாவடிகளிலும் வன்னியில் 7 வாக்குச் சாவடிகளிலுமாக நாடு முழுவதிலும் 573 வாக்குச் சாவடிகளில் வாக்கு மோசடிகள் இடம் பெற்றுள்ளன.

நேர்மையானதும் நீதியானதுமான முறையில் தேர்தல் நடை பெற்றிருப்பின் மோசடிகள் இடம் பெற்ற சாவடிகளில் வாக்குகளை நிராகரித்திருக்க வேண்டும்.

தேர்தல் ஆணையாளர் இவ்வாறான சில சாவடிகளின் வாக்குகளை மட்டும் ரத்து செய்து விட்டு பல சாவடிகள் குறித்து சட்ட நடவடிக்கை எடுக்கத்தவறி விட்டார்.

சட்டவிரோதமாக திணிக்கப்பட்ட வாக்குகள் குறித்தும் கண்காணிப்புக்குழுவினர் கருத்தில் எடுக்கவில்லை.

நடந்து முடிந்தது அநீதியான தேர்தல் என்பதற்கு தேர்தல் தினத்திற்கு முன் தினம் வரை பதிவான 2 ஆயிரத்து 36 வன்செயல்களே சான்றாகும் எனவும் உள்ளூர் தேர்தல் வன்செயல் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது. [க-உ]

# பிரான்ஸிலிருந்து ஏமாற்றத்துடன் கொழும்பு திரும்பிய தாயும், மகளும்

### இம்சைகளுக்கும் உள்ளாக்கப் பட்டனராம்

[கொழும்பு]

பிரான்ஸ் நாட்டில் குவைத் தூதரகத்தின் ராஜதந்திரி ஒருவர் வீட்டில் நீண்ட காலமாக சம்பளம் இல்லாமல் வேலை செய்த இலங்கையர்களான தாயும் மகளும் சொந்த நாடு திரும்பியுள்ளனர்.

வாரத்தில் 7 நாட்களும் காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை தம்மிடம் வேலை வாங்கியதுடன் தாம் பல்வித துன்புறுத்தல்களுக்கும் உள்ளாகியதாகவும் பாதிக்கப்பட்ட தாயும் மகளும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதே வேளை, சி. ஏ. எம். டி. எஸ் என்று அழைக்கப்படும் அடிமைப் போக்கை எதிர்க்கும் சர்வதேச அமைப்பு இவ்விவகாரத்தில் தலையிட்டு இவர்களது சம்பளத்தைப் பெற்றுக் கொடுக்க எடுத்த முயற்சியும் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக தெரியவந்துள்ளது. (உ)

## யாழ்ப்பாணத்தில் ஸ்ரீமாவோவுக்கு அஞ்சலி

(யாழ்ப்பாணம்)

காலஞ் சென்ற முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவிற்கு நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ். நகர வர்த்தக நிலையங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள், பிரதேசசபைகள் திணைக்களங்கள் போன்றவற்றின் முன்னால் வெள்ளை கொடிகள் பறக்க விடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. (ந-106)

## ஏறாவூரில் வெற்றிப்பேரணி ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றினர்

(கொழும்பு)

நடந்துமுடிந்த பொதுத் தேர்தலில், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினராக அலிஷாகிர் மௌலான தெரிவானதைக் கொண்டாடும்வகையில் ஏறாவூரில் வெற்றிப்பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு கலந்து கொண்ட இவ் வெற்றிப் பேரணியின்போது, அலிஷாகிர் மௌலான திறந்த வாகனத்தில் பவனிவந்தார்.

இதன்போது, பட்டாசு கொளுத்தி மக்கள் ஆரவாரஞ் செய்தனர்.

இதனால், சம்பந்தப்பட்ட வீதியூடான போக்குவரத்துக்கள் சிலமணிநேரம் தடைப்பட்டன.

இப்பேரணியில் தமிழ், முஸ்லிம் மக்கள் இனபேதமற்ற முறையில் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர். (உ)

## இருவர் பலியாம்

(கொழும்பு)

வெலி ஓயாப்பகுதியில் தாக்குதல் சம்பவம் ஒன்றில் விடுதலைப் புலிகள் தரப்பில் இருவர் கொல்லப்பட்டதாக விஷேட ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (க)

## தேர்தல் வன்முறைகள் எதுவும் வன்னியில் இம்முறை இடம்பெறவில்லை

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் தேர்தல் பிரசாரங்கள் முடிவடைந்ததையடுத்து எந்த விதமான தேர்தல் வன்முறைகளும் இடம்பெறவில்லை என [illegible]

[illegible] விக்கப்படுகிறது.

இதே வேளை வவுனியா தமிழ் மக்கள் நலன் காக்கும் அமைப்பு என்னும் பெயரில் வவுனியா நகரெங்கும் துண்டுப் பிரசுரமொன்று வெளியிடப் [illegible]

தல் பிரசாரங்கள் முடிவடைந்ததையடுத்து எந்த விதமான தேர்தல் வன்முறைகளும் இடம்பெறவில்லை எனவும், அமைதி நிலவுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தேர்தலை ஒட்டி வவுனியா நகரில்பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு இராணுவமும் பொலிஸாரும் தீவிர ரோந்துப் பணியில் ஈடுபட்டுள்ளனர். இதனால் நகரில் சனநடமாட்டம் குறைவாக காணப்படுவதாகவும் தெரி

தமிழ் மக்கள் நலன் காக்கும் அமைப்பு என்னும் பெயரில் வவுனியாநகரெங்கும்துண்டுப் பிரசுரமொன்று வெளியிடப்பட்டு மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இத்துண்டுப் பிரசுரத்தில் புளொட், ரெலோ அமைப்புக்களின் கடந்த காலச் செயற்பாடுகள் பற்றி விமர்சித்திருப்பதாகவும் குறிப்பாக ரெலோ அமைப்பினையே விமர்சித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(வ-வ)

கொடிகள் பறக்க விடப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

(ந-106)

தில் பவனிவந்தார்.

இதன்போது, பட்டாசு கொளுத்தி மக்கள் ஆரவாரஞ் செய்தனர்.

தலைப் புலிகள் தரப்பில் இருவர் கொல்லப்பட்டதாக விஷேட ஊடக தகவல் நிலையம் தெரிவித்துள்ளது. (க)

# பிச்சைக்காரரின் திருட்டு முயற்சி பொது மக்களால் முறியடிப்பு

## நல்லூர் ஆலயத்தில் சம்பவம்

[யாழ்ப்பாணம்]

பிச்சைக்கார வேடத்தில் இருந்த ஒருவர் பூட்டப்பட்டிருந்த சைக்கிளைத் திருட முற்பட்ட போது பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

மேற்படி சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நல்லூர் கந்தசுவாமி ஆலயச் சுற்றாடலில் இடம் பெற்றுள்ளது.

சுமார் 55 வயது மதிக்கத்தக்க மேற்படி நபர் பூட்டப்பட்டிருந்த சைக்கிளை திறக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போதே பொது மக்களால் இத்திருட்டு முறியடிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் ஆலயத்திற்கு அண்மையில் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் இல்லாததனால் கோவிலுக்குச் செல்லுகின்ற பக்தர்கள் ஆலயத்திற்கருகிலேயே தமது சைக்கிள்களை நிறுத்துவது வழக்கமாகும்.

அத்துடன் இவ்வாலயத்தில் பிச்சைக்காரர்களின் தொல்லைகளும் அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(செ-5)

# வீட்டுத் தளபாடங்கள் அன்பளிப்பு

(மல்லாகம்)

வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக அனுசரணையுடன் யாழ். மாவட்டத்தைச்சேர்ந்த சகல வலய கழகங்களும் மானிப்பாயில் இயங்கும் வாழ்வகத்திற்குதேவையான தளபாடங்களை வழங்கியுள்ளார்கள்.

இத்தகைய அன்பளிப்பு ஒவ்வொரு முறையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க)

# செஞ்சிலுவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

அரசர் சங்கர் ராதாகிருஷ்ணன் தனலட்சுமி F 3 G தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. என்பவரை சர்வதேச செஞ்சிலுவை குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

# தமிழரென்னும் இன உணர்வோடு எமது கடசிக்கு வாக்களித்த அன்புள்ளங்களுக்கு எம் நன்றிகள்

## அ. இ. த. காங்கிரஸ் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழரென்னும் இனஉணர்வோடு தலை நிமிர்ந்து நின்று தமிழ் காங்கிரசிற்கு வாக்களித்த அனைவருக்கும் நன்றிகூறுகின்றோம்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் தமது கட்சிக்கு ஆதரவளித்த தமிழ் வாக்காளப் பெருமக்களிற்கு நன்றி தெரிவித்து வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ்அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலட்சியப்பற்றோடு எம்மை ஆதரித்த உங்கள் நல்வாழ்வுக்காக நாங்கள் தொடர்ந்து உழைப்போம். நீங்கள் தந்துள்ள வெற்றியானது எமக்கு நீங்கள் தந்துள்ள பலமாகும்.

சுதந்திர இலட்சியத்திற்கு எதிராக உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் செய்யப்படும் பொய்ப் பிரசாரங்களை முறியடிப்போம். இடம்பெயர்ந்து அல்லல்படும் உங்கள் துன்பங்களுக்கு முடிவுகாணும் விதத்தில் செயல்படுவோம்.

பணபலத்திற்கு நீங்கள் மண்டியிடவில்லை. பொய் வாக்குறுதிகளிற்கு நீங்கள் செவிசாய்க்கவில்லை. ஓர் உன்னத இலட்சியத்திற்காக நீங்கள் வாக்குகளை அளித்தமையையிட்டு நீங்கள் பெருமைப்படமுடியும். நீங்கள் எங்களுக்கு அளித்த வெற்றியானது வருங்கால வெற்றிகளின் ஆரம்பமேயாகும். என்றும் உங்கள் நலனுக்காக உழைப்போம். தியாகமாமனிதர் குமார் பொன்னம்பலம் அவர்கள் காட்டிய வழியில் தொடர்ந்து செல்வோம். இவ்வாறு அவ்அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### இந்திய முன்னாள் பிரதமர்

# நரசிம்மராவ் மீதான தீர்ப்பு

# வருங்காலத்தவருக்கு பாடமாகும்

## மேற்கு வங்க முதல்வர் தெரிவிப்பு

(புதுடில்லி)

ஊழல் மோசடிகளில் ஈடுபடும் அரசியல் வாதிகளுக்கு இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவுக்கு வழங்கப்பட்ட தீர்ப்பு ஒரு நல்லபாடமாய் அமைந்துள்ளது என்று மேற்கு வங்க முதல்வர் குறிப்பிட்டார்.

முன்னாள் பிரதமர் பி. வி. நரசிம்மராவ், பூட்டாசிங் ஆகியோருக்கு வழங்கப்பட்ட தீர்ப்பை அடுத்தே கருத்துத் தெரிவிக்கையில் மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாஜ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் 150 வருட இந்தியாவின் நேர்மை நீதிகள் இதனால் கெட்டுவிட்டதென்றும் ஊழல்களுக்கெல்லாம் அரசியல் வாதிகளே பொறுப்பென்றும் மக்களெல்லாம் இப்படியான ஊழல்களை எதிர்த்துப்போரிட முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். (து)

### சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனம்

## உதைபந்தாட்டப் போட்டி

## பிரேசில் முதலாம் இடம்

(லண்டன்)

சர்வதேச கால்பந்தாட்டச் சங்கங்களின் சம்மேளனங்களினால் மேற் கொள்ளப்படும் தரப்படுத்தல் போட்டிகளில் 822புள்ளிகளைப்பெற்றுபிரேசில்' முதலாமிடம் பெற்றுள்ளது.

உலக சம்பியன் 'பிரான்ஸ்' 701 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

முன்னாள் உலக சம்பியன் ஆர்ஜென்ரீனா' 764 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்திலுள்ளது.

செக்குடியரசு, இத்தாலி ஸ்பெயின், ஜேர்மனி, போர்த்துக்கல், நெதர்லாந், யூகோஸ்லாவியா அடுத்து 7 இடங்களிலுள்ளன.

மெக்சிக்கோ, நோர்வே, றூமேனியா ஆகியவற்றுக்கு அடுத்த 15 வது இடத்தில் இங்கிலாந்து உள்ளது. (த)

## உலக தரிசனம்

## விசேட சந்திப்பு

(சென்னை)

மாக்சிஸ்ட் கம்யூனிஸ் கட்சியின் மாநில செயலாளர் ஆர். நல்லகண்ணுவும் திராவிடக் கழகபொது செயலாளர் கே. வீரமணியும் அண்மையில் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்தனர்.

ரான்சி வழக்கு தீர்ப்பின் முதன்முதலாகச் சந்திக்கச் சென்றார்கள். இவர்களுடைய சந்திப்பு ஒரு நல்லெண்ணச் சந்திப்பேயென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

### அவு. முன்னாள் கிரிகெட் வீரர்

## பிரெட்மனின் பெயரை விளம்பரத்திற்கு பயன்படுத்த தடை விதிப்பு

(கான்பரா)

அவுஸ்ரேலியா முன்னாள் கிரிக்கெற் விற்பனர் 'டொனல்ற் பிரெட்மன்' பெயரை வர்த்தக நோக்க விளம்பரங்களில் பயன்படுத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இத் தடையுத்தரவினை அந் நாட்டுப்பிரதமர் 'ஜோன் போல்ட்' பிறப்பித்துள்ளார்.

இக்கிரிக்கெற்வீரர் தனது பெயரை வர்த்தக நோக்கம் கொண்ட பல்வேறுநிறுவனங்கள் பயன்படுத்துவதற்கு எதிராக எடுத்த சட்டநடவடிக்கையினை அடுத்து மேற்படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக விளம்பரங்களில் தனது பெயர் இடம் பெறலாமா என்பதை பிரெட்மனே தீர்மானிக்க வேண்டுமென கிரிக்கெற் பிரியரான 'கோவாட்' தெரிவித்துள்ளார். (த)

## ஐ. நா. செயல்திட்ட மோசடி பெண்மணிக்கு தண்டனை

### அமெரிக்க நீதிமன்றில் சம்பவம்

(லண்டன்)

ஐக்கிய நாடுகள் அமைப்பின் சுற்றாடல் செயல் திட்ட நிதியை மோசடி செய்த குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில், பெண் ஒருவருக்கு அமெரிக்க நீதிமன்றம் வரும் பணத்தினைசொந்தத்தேவைகளுக்காகப் பயன்படுத்தினார் என சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தனது பெயரில் தவறுதலாகா வங்கியிலிடப்பட்ட 7 இலட்சம் அமெரிக்க டொ

## சீனாவின் இராணுவ ஒத்திகை

(பீஜிங்)

சீனா மிகப் பெரிய இராணுவ ஒத்திகை ஒன்றை அண்மையில் நடத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1964 ஆம் ஆண்டுக்குப் பின் இடம்பெற்ற மிகத் பெரிய அளவிலான ஒத்திகை இதுவென தெரிவிக்கப்படுகிறது.

சீனமக்கள் இராணுவமும் விமானப் படையும் கடற் படையும், இணைந்து நடத்தும் இப்பயிற்சி ஒத்திகையில் தங்கள் வல்லமை எல்லாம் காட்டக் கூடிய அதிசக்தி வாய்ந்த சாதனங்களுடன்

# இந்தியாவில் புதிய மாநிலங்கள் விரைவில் செயற்படும்

## மத்தியஉள்துறை அமைச்சர்தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் புதிதாக உருவாக்கப்பட்ட மாநிலங்கள் நவம்பரில் இயங்கும் என. உள்துறை அமைச்சர் எல். கே. அத்வாணி தெரிவித்தார்.

சத்தீஸ்வர் மாநிலம், உத்தராஞ்சன மாநிலம், ஜார்கண்டு மாநிலம், எலிமுன்சம் முறையே ராஜ்பூர், செக்கிராப், பூர், ரஜி, ஆகிய தலைப்பட்டணய்களைக் கொண்டு இயங்க இருக்கின்றன.

நவம்பர்மாதம் 9 ஆம்திகதியும் 12ம் திகதியும் ஆரம்பமாக இருக்கும் புதிய மாநிலங்கள் பற்றி மத்திய பிரதேஷ் பீஹார் உத்திரப் பிரதேஷ் ஆகிய மாநிலங்களுக்கு அறிவிக்கப்படுமென்றுஅத்வாணி தெரிவித்தார்

## மெய்வல்லுநர் சம்மேளனத்திடம் மன்னிப்புக் கோரிய அமெ. வீரர்கள்

வாஷிங்டன்)

சிட்னி ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான அஞ்சலோட்டத்தில் தங்கப்பதக்கம் வென்ற அமெரிக்க விளையாட்டு வீரர்க,ள் அந்நாட்டு மெய்வல்லுநர் சம்மேளனத்திடம் மன்னிப்புக் கோரியுள்ளனர்.

சிட்னி ஒலிம்பிக் பதக்கம் வழங்கும் வைபவத்தின் போது, மேற்படி குழுவினர் தேசிய கீதத்திற்கும், நாட்டுக்கும் அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதமாக நடந்துகொண்டதாக பல்வேறு குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.

இதனையடுத்தே தாம் நடந்துகொண்டவிதம் ஒழுக்கத்திற்கு மாறானது என்பதை ஒத்துக்கொண்டதின் பேரில் மன்னிப்புக்கோரியதாக தெரியவந்துள்ளது. (உ)

## பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் ஜவார் ஷபாஸ் திடீர் இராஜினாமா

(பங்களாதேஷ்)

பாகிஸ்தான் தகவல் துறை அமைச்சர் ஜவார் ஷபாஸ் நேற்றுமுன்தினம் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இராணுவ ஆட்சியாளர் பெர்வேஷ் முஷாரப் தலைமையிலான அரசில் தகவல் துறை அமைச்சராகப் பணி புரிந்து வந்த இவர் அடிக்கடி வானொலி தொலைக்காட்சிகளில் தோன்றி இராணுவ அரசு எடுக்கும் தீர்மானங்களை நியாப்படுத்தி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆட்சியாளர் முஷாரப்பின் கட்டாயத்தின்பேரிலேயே இவரது இராஜினாமா அமைந்திருப்பதாகக் கருதப்படும் போதிலும் தனது சொந்தக் காரணங்களுக்காகவே இம்முடிவினை மேற்கொண்டதாக ஜவார் ஷபாஸ் தெரிவித்துள்ளார்.

இவருடைய பதவிக்கு நியமிக்கப்படுபவர் யார் என்பது குறித்த விபரங்கள் அடுத்த வாரம் இடம் பெறவுள்ள அமைச்சரவைச்சீர்திருத்தங்களின் பின் தெரியவரும் என நம்பப்படுகிறது. (உ)

## வீதி திருத்தப் படவில்லை

(மல்லாகம்)

இணுவில்மேற்கு புகையிரத நிலைய வீதி இதுவரை காலமும் திருத்தப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றது. (செ-ப-14)

### உலக தரிசன அறிவுப் போட்டி இல: 03

முழுப் பெயர்;- ..............................

முகவரி;- ..............................

நிதியை மோசடி செய்த குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில், பெண் ஒருவருக்கு அமெரிக்க நீதிமன்றம் வரும் பெப்ரவரி மாதம் 7 ஆம் திகதி தண்டனை வழங்கவுள்ளது.

40 வயதுடைய மேற்படி பெண் ஐக்கிய நாடுகள் அமைப்பின் 2 இலட்சத்து 50 ஆயிரம் அமெரிக்க டொலர் றம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

தனது பெயரில் தவறுதலாகா வங்கியிலிடப்பட்ட 7 இலட்சம் அமெரிக்க டொலரினை அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் கிடைத்த பணமெனக்கருதி தன் சொந்தத் தேவைகளுக்காகப்பயன்படுத்தியதாகமேற்படிபெண்தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். (உ)

தும் இப்பயிற்சி ஒத்திகையில் தங்கள். வல்லமை எல்லாம் காட்டக் கூடிய அதிசக்தி வாய்ந்த சாதனங்களுடன் இணைந்த ஒத்திகைப் பயிற்சியாகுமென்று சொல்லப்படுகிறது.

10 ஆயிரத்துக்கு மேற்பட்ட வீரர்கள் கலந்து கொள்ளும் இவ் ஒத்திக்கை மங்கோலியாவின் நடுப் பகுதியிலும் சீனாவின் தென் கிழக்குப் பகுதிகளிலும் இடம் பெறுமென்று தெரிவிக்கப்படுகிறது. (க-நு)

முழுப் பெயர்;-..............................................

முகவரி;- ..............................................

..............................................

பிறந்த திகதி:- ..............

போட்டியாளர் கையொப்பம்..............

பெற்ற புள்ளிகள் ..........

# வட்டிக்கடை வியாபாரிக்கு மனைவியை விற்ற ரொட்டிக்கடை முதலாளி

### ராஜஷ்தான் மாலநித்தில் சுவாரஸ்ய சம்பவம்

[புதுடில்லி[

ரொட்டிக் கடை வியாபாரி தனது இளம் மனைவியை உத்தரப் பிரதேச வட்டிக்கடைக்காரருக்கு விற்ற பரபரப்பூட்டும் சம்பவம்ராஜஷ்தான் மாநிலத்தில் இடம்பெற்றது.

இந்த விற்பனை குறித்து சம்பந்தப்பட்ட கணவன் மனைவிக்கிடையே தகராறு முற்றியதாகவும் இதனை யடுத்து பொலிஸார் இவர்கள் இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது; ராஜஷ்தானில் ரொட்டிக் கடை நடத்தி வரும் ஒருவர் கடையை பெரிதுபடுத்த எண்ணி ஆறு மாதத்திற்கு முன் திருமணம் செய்து கொண்ட இளம் மனைவியை மனைவிக்குத் தெரியாமலே விலை பேசியிருக்கிறார்.

உத்தரப் பிரதேசத்தில் உறையர் என்னும் கிராமத்தில் வட்டிக் கடை நடத்தி வரும் ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபாவிற்கு தனது மனைவியை எப்படியோ கொண்டு சென்று விற்றிருக்கிறார்.

இந்த விற்பனை குறித்து ரொட்டிக் கடைக்காரருக்கும் மனைவிக்குமிடையே தகராறு மூண்டது. யாரைக் கேட்டு என்னை விற்றாய். விற்கவா என்னைதிருமணம்செய்தாய். என்ற கேள்விகளைக் கேட்க தகராறு முற்றியது.

இதையறிந்த மாநிலம் பொலிஸார் இருவரையும் கைது செய்து விசாரித்து வருகிறார்கள். (து)

# கடத்தப்பட்ட விமானம் பாக்தாத்தில் தரையிறங்கியது

### பயணிகள் விடுவிப்பு

(பாக்தாத்)

சவுதி அரேபியாவிலிருந்து பிரிட்டன் நோக்கி புறப்பட்ட போஜிங்777விமானம் நேற்று கடத்தல்காரர்களால் மத்திய தரைக் கடல் வானில் வைத்துக் கடத்தப்பட்டது.

கடத்திய இருவரும் சிரியாவிற்கு விமானத்தை செலுத்தும்படி வற்புறுத்தியதாகவும் விமானிகள் மறுக்கவே ஈராக் தலைநகரான பாக்தாத்திற்கு தரையிறக்கச் சம்மதித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத் விமானநிலையத்தில் விமானம் இறங்கியதும் பாதுகாப்புப் படைகள் அதனைச் சூழ்ந்து கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து ஈராக்கின் போக்கு வரத்து அமைச்சர் அசமட்மூர்ஜஹான் கடத்தல் காரர்களுடன் பேச்சுகள் நடத்தினார் எனவும் மேலும் அறியப்படுகிறது.

இதன் பயனாக எல்லாப் பயணிகளும் விடுவிக்கப்பட்டதாகவும் கடத்தல்காரர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு உள்ளனரென்றும் பாக்தாத் தொலைக்காட்சிச் செய்தி தெரிவிக்கிறது.

இப்பொழுது பாக்தாத்தில் உளள ஹொட்டேல் ஒன்றில் 150 பயணிகளும் தங்க வைக்கப்பட்டுள்ளனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

கடத்தல்காரர் இருவரும் புகலிடம் தேடிப் புறப்பட்டவர்கள் என்றும் இது பற்றிய மேலதிக விபரங்களை தொலைக்காட்சி அறிவிக்கவில்லையென்றும் தெரியவருகிறது. (து)

'' அஞ்சுவது அஞ்சாமை பேதைமை! அஞ்சுவது அஞ்சல்அறிவார்தொழில்''

குறள்

வலம்புரி

## அதிசயமான உண்மை

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு மக்கள் வாக்களித்தது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காகவே என்று பிரதமர் இரட்ணசிறி விக்கிரமநாயக்கா கூறியுள்ளார். பிரதமராக சத்தியப்பிரமாணம் செய்த பின்பு சமய நிகழ்வில் கலந்து கொண்டபோதே இக்கருத்தை அவர் தெரிவித்துள்ளார். கடந்த ஆறு வருடங்களுக்கு முன் பொதுஜனஐக்கிய முன்னணி தேர்தலில் பெருவெற்றி பெற்று ஆட்சியமைத்த போதும் இதே கருத்தை ஜனாதிபதி சந்திரிகா கூறியிருந்தார்.

பொதுவாக பெரும்பான்மைக் கட்சிகள் ஆட்சிப்பீடமேறுவதற்குப் பயன்படுத்தும் ஒரு சுலோகமாக ''இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம்'' என்ற வாசகம் அமைந்துள்ள தென்பதில் அதிசயம் இல்லை. ஆனால் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஓய்வையடுத்து பிரதமராகப் பதவியேற்ற போதும், அதனையடுத்த தேர்தல் பிரச்சாரங்களின் போதும் இனப்பிரச்சினை தொடர்பாகவும், தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்பாகவும்காரசாரமாக-இனத்துவேசம்துள் பறக்கத்தக்க வகையில் உரையாற்றிய இரட்ணசிறிவிக்கிரமநாயக்காவின் வாயால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவே மக்கள் பொதுஜனஐக்கிய முன்னணிக்கு வாக்களித்தார்கள் என்று கூறப்பட்டமை அதிசயமான உண்மையென்றே கருத வேண்டியுள்ளது.

தேர்தல் காலங்களில்

# இடம்பெயர்வோரின் மனஅவலங்களைபோக்கி

# அன்புக்கரம் நீட்ட வேண்டியது அவசியமே

இடம்பெயர்வுகளின் போது சிதறிப்பிரிந்துபோகும் சொந்த பந்தங்கள் பின்னர் தமது உறவுகளை முயற்சி மூலம் சேர்ந்து மகிழ்கின்றனர். பல சந்தர்ப்பங்களில்அது சாத்தியப்படாமல் போவதும் உண்டு. ஆனால்நட்புரீதியான தொடர்புகள் தம்மை அவ்வளவாக யாரும் தேடுவது இல்லை.

தாய்- பிள்ளை, கணவன்-மனைவி, சகோதரர்கள், மாமன்-மாமி அயல்வீடுஎன்ற தொடர்புகள் தமது மன நெருக்கத்தால் ஒருவரையொருவர்உயிருள்ளளவும்ஆதரித்துத் தேடிஅலைந்து கண்டுபிடித்துக் கொண்டாடி மகிழ்கின்றனர். உறவுகளை இழந்தவர்கள் கூட அதனைவருடக் கணக்கில் எண்ணியெண்ணி துயர் கொண்டாடுகின்றனர். இவை நடை முறையில் உள்ளவை.

### நட்புக் கூட்டம்

சகபாடிகளாகக்கற்றோர், தொழில் தலங்களில் ஒன்றாக பழகியோர், கோயில்களில் சன சமூகநிலையங்களில் ஒன்றாக பழகியோர், சந்தையில் கடைகளில் கண்டு உறவு கொண்டோர் எனஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு மிகப் பெரிய தொகுதி பழக்கமான மக்கள் கூட்டம் இருக்கும்.

இவ்வாறான கூட்டம்இடப்பெயர்வின் போது முற்றாக மாறுதலடைந்து விடுவதால் அவன் பெரிதும் பாதிக்கப்படுவான், முடி வெட்டுவதற்கும், துணிவெளுப்பதற்கும், சைக்கிள் திருத்துவதற்கும், சாமான்களை வாங்குவதற்கும், ஆலோசனை கேட்பதற்கும், கூடிக்கொண்டு செல்வதற்கும் தமது மனதுக்கு இசைந்த ஏற்றவாறு அமையக் கூடியஇன்னொருவரைத்தேடுவது அரிதாகவே அமையும்.

### இழந்த உறவுகள்

இவ்வகையான உறவுகள் முக்கியத்துவம் குறைந்தவை என ஒதுக்கி விட முடியாது. பணம் கொடுத்து செய்யக் கூடிய சாதாரண தொழில்களாக இவை அமைந்திருந்தாலும் இடப்பெயர்வுக்கு உட்பட்ட ஒருவன் சிறிது காலத்துக்கு இவற்றுக்காக இடர்ப்படுவான் என்பதுநிச்சயம்.

திடீரென ஒரு காயம் ஏற்பட்டு விட்டால் தனக்கு அன்பாக மருந்து கட்டி இதமாகப் பேசிவலி தெரியாது மாற்றி விடும் மருத்துவரின் ஞாபகம் வந்து அவன் வாடுகிறான். இவ்வாறே ஒவ்வொருவிடயத்திலும் அவனது உள்ளத்தில் ஏற்படும் தாக்கம் அவனது வாழ்க்கையை பெரிதும் பாதித்து விடுகிறது. இதனைப் பற்றிய சிந்தனை அறிஞர்களிடையே வெளிப்பட்டதாக இன்னும் தெரியவில்லை.

மனிதனின் அடிப்படைப் பிரச்சினைகளான உணவு, உடை, உறைவிடம், கல்வி தொழில்சார் பிரச்சினைகள், விளையாட்டு, சுகாதாரம், மருத்துவம் என்பன பற்றி இடம் பெயர்ந்துள்ள மக்களிடையேகவனம் செலுத்தப்படுகிறது. இங்கு ''உளத்தாக்கம்'' பற்றிமிகக்குறைந்த அளவுக்குக்கூட யாரும் சிந்திப்பதில்லை.

### முதியோர் மத்தியில்

இத் தாக்கமானது இளைஞர்களிடையேயும் வயது முதிர்ந்தவர்களிடையேயும் இன்று அதிகளவில் காணப்படுகிறது. அவர்கள் தத்தமது இடங்களுக்குத்திரும்ப அதிகளவில் ஆசைப் படுவதற்குக் காரணம்பொருளாதாரசமூக காரணங்களுக்காக மட்டுமல்லாது உளத்தாக்கத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவும் ஆகும்.

சிறுவர்களும் குழந்தைகளும் இப்பிரச்சினைக்கு ஆளாக மாட்டார்கள். அவர்கள் புதிய இடத்தில் கண்ட உறவுகளை வலுப்படுத்தி அவர்களுடன் இசைந்து வாழவேஅதிகம் விரும்புவார்கள்.

இவ்வகையில்இடம்பெயர்ந்தோரின் மன அவலங்களை உணர்ந்த அவர்களுக்கு இதந்தரும் வகையில் நம்மை மாற்றவேண்டியது அவசியமும் அவசரமுமானதாகும்.

தென்மராட்சியிலிருந்து இடம் பெயர்ந்தோர் வலிகாமம், மற்றும் வடமராட்சியில் வசிக்கும் இவ்வேளையில் அவர்களுக்கு கை கொடுப்பது மனிதாபிமானம் மிக்க கடமையாகும்.

ஏனெனில் இடம் பெயர்வே தமிழனின் அன்றாடசம்பவங்களாகி விட்ட நிலையில் சுய நலத்தை ஒறுத்து பொது நல அடிப்படையில் தம்மை மாற்றுவதன் மூலம் நமக்கு எதிராக விடுக்கப்படும் சவால்களுக்கு முகம் கொடுக்க கூடியவாறு நம்மை தயார்ப்படுத்த வேண்டியதும் அவசியமானதே.

### யுத்தத்தை நிறுத்தி

# விடுதலைபுலிகளுடன் பேச்சு நடாத்த அரசுக்கு அழுத்தம் கொடுப்போம்

## ரெலோ அமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

நடைபெறும் யுத்தத்தை உடன் நிறுத்தி சர்வதேச மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் உடனடி பேச்சு வார்த்தையை ஆரம்பிப்பதற்கான அழுத்தத்தை பிரயோகிப்போம்,

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தேர்தல் முடிவு தொடர்பாக தமிழ்மக்களுக்கு விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அனைத்து இலங்கையிலும், விசேடமாக வடக்கு – கிழக்கிலும் வாழும் தமிழ்ப்பேசும் மக்கள் சொல்லொணா துயரங்களுக்கும், அடிப்படை ஜனநாயக உரிமைகளனைத்தும் மறுக்கப்பட்ட நிலையில் கெடுபிடிகள் பலவற்றுக்கும் முகம்கொடுத்திருக்கும் ஒரு பட்டும் ஆயிரக்கணக்கான வாக்குகளை எமக்கு அளித்த யாழ், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்ட மக்களுக்கும் நாம் நன்றியுடையவர்களாக இருக்கின்றோம்.

தமிழ் பேசும் மக்களின் தேசிய உரிமைகளுக்கான போராட்டத்தின் புதிய பலத்தை எமக்கு ஆதரவுதந்து ஆசீர்வதித்து ஆரம்பித்து வைத்துள்ளனர். தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் நிலையை உறுதிப்படுத்தியுள்ளனர்.

வடக்கு-கிழக்கு பிரதேசம் உடனடியாக சகஜ நிலைக்கு திரும்புவதற்காகவும் மட்டுமன்றி இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்கள் தனியொரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு பிரிக்கப்படாத வடக்கு – கிழக்கு மாகாணத்தில், மீளப்பெறமுடியாத... யில் ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் நமது தேசிய இனப்பிரச்சனையின் தீர்வுக்காக நாம் பெற்ற பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்தையும் நமது கட்சியின் செல்வங்களையும் செல்வாக்கையும் பிரயோகிப்போம் எனறு தமிழ் பேசும் மக்களிடம் வாக்குறுதியளிக்கின்றோம். இவ்வாறு அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஆயுதங்கள் மீட்பு

புள்ளீட்டியாவ பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர் ஒருவரின் வீட்டிலிருந்து ஒருதொகை துப்பாக்கிகள் மீட்கப்பட்டுள்ளதாக வென்னப்பு பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சட்டவிரோதமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த இந்த ஆயுதங்களில் 12ரகதுப்பாக்கி 22 ரக துப்பாக்கி, றிவோளர் மற்றும் 9 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அரசியல் பழிவாங்கலுக்காகவே இவை மறைத்து வைக்கப் பட்டிருக்கலாம் என பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (4)

# சீமாட்டி லீலாவதி இராமனாதனின் பணி காலம் காலமாக நிலைத்து நிற்கும்

(யாழ்ப்பாணம்)

உலக அரங்கில் தமிழ்ப் பெண்கள் ஏனையவர்களுக்கு நிகராக சமானமாக வாழவும் கல்வி, சமயவாழ்வு... சீமாட்டி லீலாவதி இராமநாதன்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர்

உண்மையென்றே கருத வேண்டியுள்ளது.

தேர்தல் காலங்களில் சிங்களப் பேரினவாதிகளின் வாக்குகளையும், பௌத்த பிக்குகளின் ஆதரவுகளையும் பெற்றுக்கொள்வதற்காக பிரதமர் இனப்பிரச்சினை தொடர்பாக-தமிழ்இனத்திற்கு எதிரான கருத்துக்களையும் அதேவேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமிழ்மக்களை ஆசுவாசப்படுத்த சாதகமானகருத்துக்களையும் வெளியிட்டார்கள் என்ற அபிப்பிராயமும் அரசியல் ஒப்புநோக்குநர்களிடம் இருப்பதை மறுப்பதற்கில்லை.

எத்தகைய அபிப்பிராய பேதங்கள் அரசியல் களத்தில் நிலவினாலும் யாதார்த்தத்தில் பிரதமரின் உரை எந்தளவில் நடைமுறைப்படுத்தப்படும். என்பதையும் தனது உரையைக் காப்பாற்றுவதற்காக அவர் எந்தளவு தூரம் பாடுபடுவார் என்பதையும் காலத்தின் நகர்வுகளே தீர்மானிக்கப் போகின்றது.

---

ஜனநாயக உரிமைகளினைத்தும் மறுக்கப்பட்ட நிலையில் கெடுபிடிகள் பலவற்றுக்கும் முகம்கொடுத்திருக்கும் ஒரு காலகட்டத்தில் நடைபெற்று முடிந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் அரசினதும், அரசு சார்பான சகல கட்சிகளினதும் ஜனநாயக விரோத செல்வாக்கின் மத்தியில் வன்னிமாவட்ட மக்கள் எமதுகட்சிக்களித்த அசைக்க முடியாத ஆதரவை இருகரம் கூப்பி நன்றியுடன் வரவேற்கின்றோம்.

எமக்கெதிராக பணபலம், அரசாங்கபலம், அதிகாரதுஷ்பிரயோகம், காடைத்தனம் ஆகியன கட்டவிழ்த்து விடப்

---

தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட்டு பிரிக்கப்படாத வடக்கு – கிழக்கு மாகாணத்தில், மீளப்பெறமுடியாத, வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக்கொண்ட சுயநிர்ணய உரிமையின் அடிப்படை

---

உலக அரங்கில் தமிழ்ப் பெண்கள் ஏனையவர்களுக்கு நிகராக சமானமாக வாழவும் கல்வி, சமயவாழ்வு ஆகியவற்றில் அவர்கள் உயர்வடையவும் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவர்

---

## தீவுப்பகுதிக்கு மின்சாரம்

### கடற்படை முயற்சி

கடற்படையினரின் முயற்சியினால் யாழ். தீவுப்பகுதிகளுக்கு நிரந்தர மின்சாரவசதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தீவுப்பகுதி மக்களின் நன்மை கருதி 200கிலோ ''வாட்ஸ்'' சக்திவாய்ந்த ஜெனரேட்டர் ஒன்றை அண்மையில் கடற்படையினர் வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.. (வ-4)

---

நாதன்.

யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சீமாட்டி லீலாவதி இராமநாதனின் நினைவுப்பேருரையை ஆரம்பித்து வைத்துப் பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது: சேர் பொன் இராமநாதனின் உயர்ந்த பணிகளுக்கும் அவரது சிறந்த சேவைகளுக்கும் பக்கத்துணையாக விளங்கிய சீமாட்டி லீலாவதியின் பணி போற்றுதற்குரியது. இராமநாதன் கல்லூரி ஆசிரியர் பயிற்சிக்கு பெரும் தொண்டாற்றியவர். இவரின் இத்தகைய பணிகள் எம் நெஞ்சில் 70 ஆண்டுகளாக நிலைத்து நிற்கக் காரணம் ஆகியது.

இவரது இவ்நினைவுப்பேருரையை சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி நடாத்த முன்வந்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும். ஏனெனில் அவர் சைவசித்தாந்த பாரம்பரியங்களை புதிய இளம் தலைமுறையாளரிடையே பரப்பி வரும் மகோன்னத சேவையை ஆற்றி வருபவர் என்றார். (வ–2)

---

# இந்துகலாசாரத்திற்கு தனியான அமைச்சு உருவாக்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் இந்துப்பேரவை வேண்டுகோள்

இந்து சமய கலாச்சார அமைச்சினை மத்திய அரசாங்கத்திலும் வடக்குகிழக்கு மாகாண சபையிலும் அமைக்க வேண்டும் என்பதனை வலியுறுத்தி ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவுக்கு வடபிராந்திய இந்துப் பேரவை கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

இக்கடிதத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் இந்து சமய கலாச்சாரத்துக்கென மத்திய அரசில் தனியான அமைச்சு நிறுவப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அது இல்லாமல்போய் விட்டது. எனவே அவ் அமைச்சை மீண்டும் உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்துக்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு கிழக்கு மாகாண சபையில் அதற்கென தனியான அமைச்சோ திணைக்களமோ இல்லை. அதனை நிறுவவும் ஆவனசெய்யுமாறும் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இதேவேளை வடக்குகிழக்கில் யுத்தத்தை நிறுத்தி அமைதிப் பேச்சு வார்த்தை ஆரம்பிக்கவேண்டும் என்றும் இக் கடிதத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது. (ந–2)

விளையாட்டுச்செய்தி

## மினி உலகக் கிரிக்கெற் கிண்ணத்தை நியூசிலாந்து தட்டிக் கொண்டது

(நைரோபி)

நைரோபியில் நடைபெற்று முடிந்த, மினி உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டியின் இறுதிநாளான நேற்று, நியூசிலாந்து அணி, இந்திய அணியை 4 விக்கற்றுக்களால் தோற்கடித்தது மினி உலகக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. முதலில் களமிறங்கிய இந்திய அணி 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கற்றுக்களை இழந்து 264 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி மிகவும் சுறு சுறுப்பாக விளையாடி 49.4 ஓவர்களில் 6 விக்கற்றுக்களை இழந்து 265 ஓட்டங்களைப் பெற்று வெற்றி வாகை சூடியது. (ந-4)

# அரச யுத்த விமானங்கள் மூலம் கொல்வதை நிறுத்த வேண்டும்

(வவுனியா)

தொடர்ச்சியான பலஇடப் பெயர்வுகளைச் சந்தித்த கரையோரப்பகுதி மக்கள் மீது கண்மூடித்தனமாக விமானங்கள் குண்டுவீசி அப்பாவிப் பொதுமக்களை கொல்வது கண்டிக்கத்தக்க செயலாகும்.

முல்லைத்தீவு மாத்தளன் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதலைக் கண்டித்து முல்லைத்தீவு மக்கள் நலன் புரிச்சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

மீன்பிடித்தடை, பொருளாதாரத் தடை, நிவாரண வெட்டு, போன்றவற்றினால் பாதிக்கப்பட்ட மக்கள் மீது கண்மூடித்தனமாக குண்டுகளை வீசித் தாக்குவது மனிதாபிமான மற்ற செயலாகும் என்று குறிப்பிடப்படுகிறது.

இச்சம்பவத்தின் போது 4வீடுகள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [வ]

## ஆளும்கட்சி வரிசையில் 116 எம்பிக்கள் இருப்பர்

(கொழும்பு)

நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் தெரிவான 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் எதிர்வரும் 18ம் திகதி கூடவுள்ள புதிய பாராளுமன்றக் கூட்டத்தில் சத்தியப் பிரமாணம் செய்யவுள்ளனர்.

பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்காவின் தலைமையில் அமரவுள்ள ஆளும்கட்சியில் 107 உறுப்யினர்களும், ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி, தேசிய ஐக்கிய முன்னணி, சுயேட்சைக்குழு-2 ஆகியவற்றைக் சேர்ந்த 9 உறுப்பினர்களும் சேர்ந்து மொத்தமாக 116பேர் ஆளும் கட்சி தரப்பில் அமரவுள்ளனர்.

பிரதான எதிர்க்கட்சியாக விளங்கும் ஐக்கிய தேசிய கட்சியில் 89 உறுப்பினர்கள் அடங்குவர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஜே. வி. பி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ், ரெலோ, சிஹல உறுமய ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 20 உறுப்பினர்கள் எதிர்த்தரப்பு வரிசையில் அமர்ந்திருப்பர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

## தேர்தல் வன்செயலில் ஈடுபட்ட 25 பொலிஸார் மீது நடவடிக்கை

தேர்தல் காலத்தில் இடம்பெற்ற வன்செயல் சம்பவம் தொடர்பாக அதனோடு தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 25 பேர்களின் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என பதில் பொலிஸ்மா அதிபர் ஏ. ஆனந்தராசா தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்செயல்களோடு தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் இவர்கள் மீது சுமார் 250 முறைப்பாடுகள் இதுவரை கிடைத்துள்ளதாகவும் இக்குற்றச்சாட்டுகளில் பெரும்பாலும் சம்பந்தப்பட்ட பிரதேச பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் தொடர்பு உண்டென்றும் அக்குற்றச்சாட்டுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

மன்னார் கடற்பரப்பில் கடற் படையினருடன் ஏற்பட்ட மோதலில் மூன்று புலிகள் உயிரிழந்துள்ளதாக புலிகள் அறிவித்துள்ளனர்.

★ மேஜர் இளம் பரிதி (அருள்சோதி திவ்வியராசா) யாழ்ப்பாணம்

★ கப்டன். ஊக்கவியன் [சிவமணி ஜெகமோகன்) திருமலை

★ லெப்டினன், அமலன் [சிறிரங்கநாதன் சதீஸ்) யாழ்ப்பாணம் [வ]

## போலியோ சொட்டு மருந்து வன்னியில் வழங்க நடவடிக்கை

வடகிழக்கு மாகாணத்தில் இம்மாதம் 28, 29 ஆகிய தினங்களில் முதற்கட்டப் போலியோ சொட்டு மருந்து வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

வன்னிமாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு 40 ஆயிரம் குழந்தைகளுக்கு சொட்டுமருந்து வழங்குவதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது. வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி எஸ். லோகநாதன் அறிவித்துள்ளார்.

இந்தமருந்துகள் இம்மாதம் 21ம் திகதி அனுப்பிவைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் 120 நிலையங்களிலும், மன்னாரில் 25 நிலையங்களிலும் இச்சொட்டு மருந்து வழங்கப்படவுள்ளது இரண்டாவது கட்டசொட்டு மருந்து டிசம்பர் மாதம் 2ம் திகதி வழங்கப்படவுள்ளது. (வ

## மோட்டார்சைக்கிள் - பஸ் விபத்தில் தந்தையுடன் சென்ற இரு பிள்ளைகள்பலி

(கொழும்பு)

நீர்கொழும்பை நோக்கி சென்றுகொண்டிருந்த மோட்டார்சைக்கிளும், கொழும்பை நோக்கி வந்து கொண்டிருந்த பஸ்ஸுும் ஜாஎலதுடெல பகுதியில் நேருக்கு நேர் மோதியதில் இரு சகோதரர்கள் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இக்கோர விபத்துச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் இடம் பெற்றது. இவ்விபத்தில் தந்தையுடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இருசிறுவர்களே மரணமானவர்களாவர்

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை ஜாஎல பொலிஸ் அதிகாரி ஜீ. ஜீ. பெரேரா மேற்கொண்டு வருகிறார். (ந-2)

## ஒருவர் பலி

(மட்டக்களப்பு)

இராணுவக் கட்டுபாடற்ற மட்டக்களப்பு பளுகாமம் பகுதியில் நேற்றுக் சிளைமோர் குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் பலியானார்.

நேற்று அதிகாலை 2-50 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் இறந்தவரின் உடல் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் அயலிலுள்ள வீடொன்றில் காணப்பட்டது

விடுதலைப் புலிகளின்மூத்த உறுப்பினர் ஒருவரை இலக்கு வைத்தே இக்குண்டு பொருத்தப்பட்டுருக்கலாம் என்றும், இறந்தவர் யாரென இதுவரை இனங்காணப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ந-4)

## பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவது துரோகம்

### ரெலோ உபதலைவர் அறிக்கை

அம்பாறை மாவட்டத்தில் சுயேச்சைக்குழு இரண்டில் வெற்றிபெற்று நாடாளுமன்ற உறுப்பினராகியுள்ள குலசேகரம் - சங்கர் பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுடன் இணைந்து ஆத்ரவு வழங்கப் போவதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து ரெலோவின் உபதலைவர் மகேந்திரன் விடுத்துள்ள அறிக்கையில் தமிழர் பிரதிநிதித்துவமூலம் தமிழர் நலன்களையும் தமிழ் பேசும் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகளையும் வென்றெடுப்பதற்காகவே தமிழர் பிரதிநிதித்துவம் அம்பாறை மாவட்டத்தில் தேவைப்பட்டது.

யுத்தத்தை தொடர்ந்து நடாத்தும்பொதுஜன ஐக்கிய முன்னணியுடன் இணைவது தமிழ்பேசும் மக்களுக்கு செய்யும் துரோகம் என்றும் இந்த முடிவினை அவர் மாற்றிச் செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுள்ளார். (ந-4)

## புலிகளின் தாக்குதலில் ஐந்து படையினர் காயம்

தென்மராட்சி, நுணாவில் பகுதியில் இராணுவத்தினரின் நிலைகள் மீது நேற்று முன்தினம் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் படையினர் தரப்பில் ஒரு அதிகாரி உட்பட 5 பேர் காயமடைந்விட்டதாகவும், இதன்போது புலிகள் இருவர் உயிரிழந்துள்ளதாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் அறிவித்துள்ளது. (ந-4)

## புதிய...

இழுபறி நிலையே மந்திரி சபையை அமைப்பதில் காலதம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவுத்துள்ளன,

## செய்முறைப் பரீட்சை

## சரசாலையில் படையினர்

ணைத் தாக்குதலில் படை யினர் தரப்பில் ஒரு அதிகாரி உட்பட 5 பேர் காயமடைந் துள்ளதாக விஷேட ஊட கத் தகவல் நிலையம் அறி வித்துள்ளது.

புலிகளின் இத்தாக்குதலை படையினர் முறியடித்து

**தேசிய ..**

கொடுத்துவருகிறது;

இதே இழுபறி நிலைஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளும் ஜே. வி.பி. சிஹல உறுமய, ஆகிய கட்சிகளுக்குள்ளும் நிலவி வருவதால் தேசியபட்டியல் எம்.பிக்களின் விபரங்களை தேர்தல் முடி வுற்று ஆறு தினங்களாகியும் இன்னமும் எந்த கட்சியும் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பிவைக்கவில்லை என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (வ)

**முதல் பிரசவத்தின்.....**

சுகமாக இருப்பதாக வைத் தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை இந் நான்கு குழந்தைகளையும் பராமரிப் பதற்கு உதவுமாறு தந்தை யார் அரசிடம் கோரிக்கை விட்டுள்ளார்; (ந-2)

**செய்முறைப் பரீட்சை**

கடந்த ஒகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் மனை யியல் மற்றும் அழகியற்கலை ஆகிய பாடங்களில்தோற்றிய பரீட்சார்த்திகளின் செயன் முறைப்பரீட்சை எதிர்வரும் 31ந்திகதி நடைபெறும்;

இப்பாடங்களில் செயன் முறைப் பரீட்சைக்கு தோற்ற தகுதியுடைய மாணவர்களுக் குரிய அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளதாக பரீட் சைகள் ஆணையாளர் ஏ.எம். ஆர்.டீ.அமரக்கோன் தெரி வித்துள்ளார்,

**எதிர்க் ..**

என வன்னிமாவட்ட ரெலோ வட்டாரங்கள் தெரிவித்துள் ளன.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவுசெய் யப்பட்ட செல்வம் அடைக் கலநாதன் மன்னாரில் இருந்து வவுனியா வந்த போது அவ ருக்கு வவுனியாவில் புளியங் குளம் சந்தியில் நேற்று அவ ரது ஆதரவாளர்களால் மகத் தானவரவேற்பு அளிக்கப்பட் டது; (வ)

தம் ஏற்பட்டுள்ளதாக கொழும்பு அரசியல் வட்டா ரங்கள் தெரிவுத்துள்ளன,

இதே வேளை காலஞ் சென்ற முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக் காவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள இலங்கை வந்துள்ள சீன உதவிப் பிர தம மந்திரி தலைமையிலான தூதுக்குழுவினரை பிரதமர் ரட்னசிறிவிக்கிரமநாட்யக்கா நேற்று சந்தித்துப் பேசியபின் செய்தியாளர் மாநாடொன்றை நடத்தி இருந்தார்.

இம்மாநாட்டில் பிரதமர் செய்தியாளர்கள் முன்நிலை யில் பேசுகையில் எமது சமய பாரம்பரியங்களின்படி சுப நேரத்தில் தான் அமைச்சர் கள் சத்தியப்பிரமாணம் செய்ய] வேண்டும். அதற்கு ரிய சுபநேரம் இன்று சரி யாக அமையவில்லை என் றும் உரிய சுபநேரத்தில் அமைச்சர்கள் சத்தியப்பிர மாணம் செய்வார்கள் என வும் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த தேர்த லில் எந்தக் கட்சியும் அறு திப்பெரும்பான்மை கிடைக் காமலேயே இந்த நிலை தோன்றியுள்ளதாகவும், இதனை அடுத்து ஐக்கிய தேசியக்கட்சியும் இச்சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி அரசு அமைக்க முயற்சி செய்து வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. [வ]

## சரசாலையில் படையினர் தேடுதல் நடவடிக்கை

### ரி56 ரக துப்பாக்கி மீட்பு

(கொழும்பு)

சரசாலையில் படையினர் அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கையின்போது ரி-56 ரக துப்பாக்கி கைப்பற்றப் பட்டதாக விசேட ஊடகத்த கவல்நிலையம் தெரிவித்துள் ளது,

இதேவேளையில் எழுது மட்டுவாழ், நாகர்கோவில் பகுதியில் படையினரின் நட வடிக்கையில் விடுதலைப்புலி கள் தரப்பில் மூவர் கொல் லப்பட்டதாக தகவல் நிலை யம் மேலும் தெரிவித்துள் ளது. ;க)

### யாழ்.அரசஅதிபர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் அரச அதிபர் க.சண் முகநாதன் இன்று கொழும்பு செல்லவுள்ளார். (ந)


## உடன் தேவை

★ இரவு நேர ஒப்புநோக்குனர்கள் (ஆண்கள் மட்டும்)

உடன் தேவை. நேரில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**'வலம்புரி'**

இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம்;



இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தின ரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும்விலா சத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி அச்சிட்டு வெளி யிடப்பட்டது.